www.tamilarangam.net

# கற்பகம்

## KATPAHAM

NR. 3 01 - 02 - 1995 இதழ் 3



தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்

Tamilsk - Dansk Venskabsforening

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**KATPAHAM**

**ISSN 0909-9697**
**udgiver**
**TAMILSK-DANSK**
**VENSKABS FORENING**
**Redaktion:**
**Troels Johansen (Ansv.)**
**Redaktionhjælp**
**M. S. Kandasamy**
**David George**
**T.Kugan**
**N. Mahendran**
**M. Shan**
**T. Selvakumar**

# கற்பகம்

வெளியிடுபவர்கள்:
தமிழ் – டெனிஸ்
தோழமை ஒன்றியம்

பத்திரிகைப் பொறுப்பாளர்:
ற்றோல்ஸ் ஜோகன்சன்

உதவியாளர்கள்:
எம். எஸ். கந்தசாமி
டேவிட் ஜோர்ஜ்
என். மகேந்திரன்
ரி. குகன்
எம். சண்
து. செல்வக்குமார்

# Inhold
## உள்ளடக்கம்

**TV og virkeligheden**
தொலைக்காட்சியும்.....

திரும்பிட வேண்டும் தம்பி
**Et liv på lavt blus**
மெல்லிய தீச்சுவாலையில்..

**Fanget i værelse 105**
அறைக்கைதிகள்..

**Kragen og Slangen**
**De tre fisk**

சிறுவர் பகுதி

வரம்

எண்ணிப்பார் தோழா

கல் தோன்றி மண்தோன்றா..

ஈழத் தமிழர் நாகரிகம்

இலங்கையில் அமைதி
ஏற்படுமா?

அருவுருவம்

சித்தி விநாயகர் ஆலயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# TV og virkeligheden.

Jeg sad forleden og så TV-avis.
6 af indslagene i programmet handlede om krig. Vi kunne sidde i egen stue og kigge på virkeligheden i forskellige lande, mens vi drak te.
Det var ikke film; de, der blev skudt, rejste sig ikke op igen og var med i næste indslag. Husene, som blev bombede og skudt i brand, var ikke kulisser til en film. Det var rigtige huse - boliger, butikker, kirker, osv.

Jeg sad forleden og så TV-avis.
Mennesker var på flugt med deres få ejendele i bylter på hovedet eller på en trækvogn. Mennesker, der var bange; mennesker, der var fortvivlede; de var ulykke- lige, græd. Der var gamle, der var børn. Det var ikke film - det var virkelighed.

Man kan sidde i Danmark og se TV-avis med den slags indslag hver dag - uden at det berører os. Måske fordi, disse ulykkelige ting sker så langt væk fra os selv.
I virkeligheden er Danmark et meget heldigt sted at bo; i virkeligheden er vi danskere så heldige, at det er uret- færdigt i forhold til mennesker andre steder i verden. Vi burde faktisk være taknemmelige - så meget, at vi blev venligere, mere gæstfrie.

Jeg spekulerer somme tider på "Hvad er et godt liv". Det er svært at finde et godt svar på. Et godt liv har ik- ke nødvendigvis noget med penge at gøre. Man kan nu engang kun spide sig mæt så mange gange om dagen; man kan kun bruge så meget tøj; bruge en bil ad gan- gen.
Penge er nødvendige, men de bringer ikke nødvendig- vis mening og lykke. Man kan ikke købe sig til et godt og indholdsrigt liv. I virkeligheden tror jeg, at den grænseløse jagt på materielle goder, er ødelæggende for os. Vi glemmer glæden ved at være sammen, ved at tale og synge. Vi bliver kulturtomme.
Det er vigtigt for danskere at forstå. Men det er lige så vigtigt for flygtninge. Som fremmede i Danmark er det helt nødvendigt, at I husker og holder fast ved de gamle traditioner og skikke. Det er nødvendigt, at I værner om de menneskelige værdier - f.eks. hjælpsomhed, ansvaret for at hjælpe hinanden, gæstfrihed, respekten for hinanden, osv. På den måde kan I som flygtninge både bevare jeres særpræg og på samme tid have en po- sitiv afsmitning på os danskere.

Der er blevet talt meget om flygtninge i den senere tid - ikke specielt om tamiler, mere om flygtninge fra det tidligere Jugoslavien. Der har været debat i Folketinget. Den debat mærkes ude i landet.
De politiske partier afslører sig voldsomt i denne tid. Både Venstre og De Konservative afslører sammen med Fremskridtspartiet meget egoistiske og uaccep- table holdninger.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Jeg mener at de udviser uansvarlig adfærd. De støtter farlige og dårlige synspunkter, som meget vel kan føre til selvtægt og kriminelle handlinger.
Derfor er det helt nødvendigt, at så mange af os som muligt siger vores mening og i vores daglige adfærd viser, at vi mener noget andet.

Jeg sad forleden og så TV-avis.
Det gjorde de fleste danskere også. Hvad skal der til for at få os allesammen til at forstå, at TV er ikke under- holdning. TV-avisen er virkeligheden - og den skal man forholde sig til.

Troels Johansen.

# திரும்பிட வேண்டும் தம்பி

திரும்பிட வேண்டும் தம்பி – நம்
தாய் திரு நாடு,
புரிந்திட வேண்டும் தம்பி – அது
பொன்னானபூமி எங்கள்.

சைவமும் தமிழும் தம்பி – எம்
தந்தையரின் குருதியும் மூச்சும்,
அடுத்த மதத்தினையும் அங்கு – அன்புடன்
ஆதரித்து வந்தோம் தம்பி.

வீடு விட்டோடி வந்தோம் – தம்பி
வீணரின் ஆட்சி வெறியால், நாடு
காடு போல் காட்சியளிக்குதாம் – மக்கள்
கவலையும் துன்பமும் சொல்ல முடியாதாம்

ஈழ மக்கள் படும் துன்பம் – இனியும்
மீள வேண்டாம் என்று,
"ஆழமான அத்திபாரம்" ஒன்று – அங்கு
அகழ்ந்து போடுவோம் "புது உலகுக்கு"

விரும்பாத சமாதானம் ஒன்று – அங்கு
விளம்புகிறார் பலபேர் கூடி,
சரிவரா தென்று தெரிந்திடு – தம்பி
சமர்தான் மீண்டும் வருமாம்.

மீண்டும் எமை அடிமை – செய்தால்
மூட்டிடுவோம் யுத்தம் ஒன்றை,
பூண்டிடுவோம் போர்க்கோலம் – அதில்
நாட்டிடுவோம் சுதந்திரக் கொடிதனை.

– எழிலன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தொலைக்காட்சியும் யதார்த்தமும்

நான் கதிரையில் அமர்ந்து தொலைக்காட்சி செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தேன், அந்தச் செய்திகளில் ஆறு ஆக்கக்கூறுகள் போரை உள்ளடக்கியதாக இருந்தது. நாங்கள் சொந்த வீட்டு அறையில் இருந்து தேனீர் அருந்திக் கொண்டு, பலநாட்டில் நடைபெறும் நிஜமான நிகழ்வுகளைக் காண்கிறோம்.

இது ஒரு படக்காட்சியன்று, இவைகள் பின் போடப்பட்டுவிட்டு மற்றய ஆக்கக்கூறுகள் இடம்பெறுகின்றது. வீடுகள் குண்டு வீசப்பட்டு, எரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு திரைப்படத்திலே, நாடகத்திலே ஒரு பகுதியல்ல. இவைகள் எல்லாம் நிஜமான கட்டிடங்கள், வீடுகள், கடைகள், மதவழிபாட்டுத் தலங்கள் என்பனவாகும்.

நான் கதிரையில் அமர்ந்து தொலைக்காட்சி செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மக்கள் தங்கள் உடமைகளின் ஒரு பகுதியுடன் இடம் பெயருவதனையும், குண்டுகளினால் காயப் பட்டவர்களையும், வாகனங்கள் தாக்கப் பட்டுள்ளதையும் காணக்கூடியதாக இருந்தது. மனதர்கள் பயந்து, நம்பிக்கை இழந்து, மிகக் கவலையுடன் அங்கும் இங்குமாக திசைமாறிச் செல்லுகின்ற துரதிஷ்டமான நிகழ்வுகளை காண்கிறோம். சிறுவர் முதல் வயோதிபர் வரை இந்த நிகழ்வுக்குள்ளாகிறார்கள். இது ஒரு திரைப்படக் காட்சியன்று நிஜமான நிகழ்வாகும்.

இப்படியான ஆக்கக்கூறுகளை ஒவ்வொருநாளும் டென்மார்க்கிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால் எந்த விதமான தாக்கங்களும் இல்லையா? இல்லாமல் இருக்கலாம் ஏனெனில் அதிக தொலைவில் இப்படியான துரதிஷ்ட செயல்கள் நடைபெறுவதனாலாகும். உண்மை என்னவெனில் டென்மார்க் வாழ்வதற்கு ஒரு அதிஷ்டமுள்ள நாடு. டெனிஷ்காரராகிய நாங்கள் அதிஷ்டமுள்ளவர்கள். ஏனெனில் உலகின் மற்றய இடங்களில் மக்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகிறது. நாங்கள் செய்யவேண்டியது என்னவெனில் நன்றியுடையவர்களாகவும், தயவுடையவர்களாகவும், விருந்தோம்பும் பண்புடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

சிறந்த வாழ்க்கை என்பது என்ன? என்று நான் சிலவேளைகளில் சிந்தித்துப் பார்ப்பது உண்டு. இதற்கு தகுதியான விடை காண்பது கடினம். சிறந்த வாழ்க்கை என்பது பணத்தினால் மட்டும் ஏற்படுவது அல்ல. வயிறு நிறைய ஒருநாளைக்கு பல தடவை உண்பதனால் மட்டுமோ, ஆடம்பர உடைகளை அணிவதனாலோ, வாகன வசதி கிடைப்பதனாலோ மட்டும் ஏற்படுவதில்லை. பணம் வாழ்க்கைக்கு வேண்டும் தான், ஆனால் பணம் கருத்துக்களையும், சந்தோஷத்தையும் கொண்டுவராது. உண்மையுள்ள தரமான வாழ்க்கை ஒன்றை பணத்தினால் வாங்க முடியாது. அளவுக்கு மேலால் பொருள் தேடுவதே


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம்மை அழிவு செய்கிறது. என்பதே உண்மை என்று நான் நினைக்கிறேன். ஒன்றாக சேர்ந்து இருப்பதனாலும், பேசிக்கொள்வதனாலும், பாடுவதனாலும் ஏற்படும் சந்தோஷத்தினை நாம் மறந்து விடுகிறோம். நாம் கலாச்சார அறிவை இழந்தவர்களாகிறோம். இதனை டெனிஷ்காரர் விளங்கிக் கொள்ள வேண்டும். டெனிஷ்காரர்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு அகதிகளுக்கும் இது முக்கியமாகும்.

டென்மார்க்கில் வாழும் பிறநாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கள் பழைய வழக்கங்கள், தங்களை அடையாளம் காணும் பழக்கங்கள் போன்றவற்றை ஞாபகப்படுத்தியும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். முக்கியம் என்னவெனில் மனிதத்தனமை அதாவது மனிதனின் பெறுமதியை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக உதவிசெய்யும் மனப்பாங்கு கொண்டவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவி செய்பவராகவும், விருந்தோம்பும் பண்புடையவராகவும், ஒருவரையொருவர் மதிப்பவராகவும், இதே போன்ற நல்ல பண்புகளைக் கொண்டவராகவும் வாழ்வதே பெறுமதியான மனிதவாழ்க்கையாகும். இதே போன்று அகதிகளும் தங்களுடைய விஷேடமாக குறிப்பிடத்தக்க அடையாளங்களைப் பாதுகாத்துக் கொண்டு டெனிஷ் மக்களால் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்று வாழவேண்டும்.

கடந்த சில வாரங்களாக தமிழ் அகதிகளைப் பற்றி அதிகம் பேசப்படவில்லை, ஆனால் முன்னைய யூ கோஸ்லேவகிய அகதிகளைப் பற்றிப் பேசப்பட்டது. இவ்விடயம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இவ்விவாதத்தின் கருத்துக்கள் நாடு முழுவதும் பரவலாகப் பேசப்பட்டது. அரசியற் கட்சிகள் பலமாக கருத்து மோதல்களை நடத்தினார்கள். இடதுசாரிக் கட்சி, பழமைப் பாதுகாப்புக் கட்சி, முற்போக்குக் கட்சி என்பன ஒன்றிணைந்து மிகவும் சுயநலமான, ஏற்றுக்கொள்ள முடியாத அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்கள்.

இவர்கள் ஒரு பொறுப்பற்ற நடத்துமுறை காட்டினார்கள் என்று நான் நினைக்கிறேன். இவர்கள் ஆபத்தான, தரங்குறைந்த கருத்துக்களை ஆதரிக்கிறார்கள். இவை பல தீமைகளை விளைவிக்கும். ஆகவே எங்களில் பலர் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டியது முக்கியமாகும்.

நான் கதிரையில் அமர்ந்து தொலைக்காட்சியைப் பார்ப்பது போல பல டெனிஷ்காரர்களும் பார்ப்பார்கள். இது ஒரு பொழுதுபோக்கு மகிழ்விப்போ அல்ல. ஒரு நிஜமான நிகழ்வுகளாகும். இதன் அபிப்பிராயம் முக்கியமானதாகும்.

*— ரோல்ஸ் ஜோகன்சன் —*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Herning, d. 01.02 .95.

Der indkaldes herved til ORDINÆR GENERALFORSAMLING i Tamilsk - Dansk Venskabsforening, **SØNDAG D. 12.MARTS KL.14.30** i SID`s lokaler, Vestergade 27., Herning.

**Der er kun adgang for medlemmer, som opfylder betingelserene for at deltage i generalforsamlingen.**

## DAGSORDEN

1. Valg af dirigent.
2. Bestyrelsens beretning, v/ formanden.
3. Fremlæggelse af revideret regnskab, v/ kassereren.
4. a) Drøftelse vedrørende beretning og regnskab.
   b) Fastsættelse af kontingent for 1995.

5. VALG
   a) Der er valg til 4 bestyrelsesposter.
   b) Der skal vælges 2 tamilske og 2 danske suppleanter, henholdsvis første og andensuppleanter.

## PAUSE

6. a) Aktivitetsplan for 1995.
   b) Medarbejdergruppe til Festevelen.
7. Indkomne forslag. Forslag fra medlemmerne skal være formanden i hænde senest 8 dage før generalforsamlingen.
8. Eventuelt.

Venlig hilsen
På bestyrelsen vegne
M.S.Kandasamy
formand



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேர்ணிங்.01.02.95.

# தமிழ் — டெனிஸ் தோழமை ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம் :- SID, மண்டபம், Vestergade 27, Herning.
காலம் :- 12.03.95. ஞாயிற்றுக்கிழமை 14.30 மணி.

**யாப்பின் விதிகளுக்கமைய அங்கத்தவர்கள் மட்டும் மண்டபத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள்**

## நிகழ்ச்சி நிரல்

1. கூட்டத்திற்கான தற்காலிகத்தலைவர் தெரிவு.
2. நிர்வாக சபையின் அறிக்கை தலைவரால் சமர்ப்பிக்கப்படும்.
3. வரவு – செலவு அறிக்கை பொருளாளரால் சமர்ப்பிக்கப்படும்.
4. அ) நிர்வாக சபையின் அறிக்கை, வரவு – செலவு அறிக்கை, விவாதம்.
   ஆ) 95ம் ஆண்டிற்கான சந்தாப்பணம்.

5. தெரிவு.
   அ) 4 நிர்வாகசபை உறுப்பினர்.
   ஆ) 2 முதலாவது பதில் நிர்வாகசபை உறுப்பினர்களும் (இதில் ஒருவர் டெனிஸ், மற்றவர் தமிழர்), 2 இரண்டாவது பதில் நிர்வாகசபை உறுப்பினர்களும் (இதில் ஒருவர் டெனிஸ், மற்றவர் தமிழர்) தெரிவு.

## இடைவேளை

6. அ) 1995ம் ஆண்டிற்கான திட்டங்கள்.
   ஆ) கலாச்சாரவிழாவிற்கான உதவியாளர்கள்.
7. அங்கத்தவர்களிடம் ஏதாவது பிரேரணைகள் இருப்பின் பொதுக்கூட்டத்திற்கு 8 நாட்களுக்கு முன்பு தலைவருக்கு எழுத்துமூலம் அறிவிக்கவும்.
8. வேறு விடயங்கள்.

நன்றி.
நிர்வாகசபை சார்பாக
திரு. கந்தசாமி
தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Følgende artiklen blev offentlighgørt i Weekendavisen i henholdsvis uge 2 og 3 - 1995.

# Et liv på lavt blus

**Mismod**. Zahiar flygtningelejr i det østlige Sri Lanka danner ramme om 242 tamilsk familer. De har hver otte kvadratmeter og udsigt til endnu mange års uvished om, hvornår de kan rejse hjem til deres egen landsby.

**Af ANDERS og LOUISE HOLGERSEN**

Landminen sprang lidt i syv on morgenen.
Adikan Krishnaverni var lige gået hjemmefra for at hente familiens madrationeringsmærker. Hun vidste ikke, at hun lige havde hørt lyden af seks soldater, der blev sprængt i luften. Hun vidste heller ikke, at det var De Tamilske Tiger, der stod bag.
Men hun vidste, at braget betød fare, og at hun ikke kunne vende hjem til sin mand og sine to sønner, der stadig var i landsbyen.
I stedet løb hun ud i junglen, hvor hun skjulte sig sammen med en masse andre, der også var flygtet. Først næste dag vovede hun at vende hjem til landsbyen, hvor hun fik at vide, at hendes mand og hendes yngste søn på fem år var blevet taget at hæren. Den ældste søn, Subramani, havde skjult sig og var derfor undsluppet.
Landminen sprang i 1986. Siden den gang har Krishnerverni ikke set sin mand og sin lille søn.
Jeg prøvede at kontakte både Røde Kors og Fredskomiteen i Batticaloa for at høre, om de havde noget nyt. Men de vidste ingenting. I dag tror jeg, at min mand og mit barn er døde, siger Krishneverni.
I dag er Krishnaverni af 49 og hendes ældste søn 16 år blot en af de 242 tamilske familer, der bor i Zahira lejren lige udenfor Baticaloa på Sri Lanka østkyst. Zahira er et tilflugtssted for folk, der er blevet dervet ud af deres hjem. Familierne kommer alle fra landsbyen Periwapullumulai, der ligger godt 30 kilometer fra Batticaloa.
Familierne nærer ingen falske forhåbninger om at komme hjem. Deres by er indtaget af hæren, og de har ingen andre steder at tage hen.
Vi kan ikke vende tilbage, som tingene er nu. Vi vil ikke risikere, at vores sønner dør, og vores døtre bliver voldtaget, siger en mor.

## Den første flugt.

Minderne hænger stadig ved fra den gang i 1986, da hæren rykkede ind i byen.
62 mennesker blev skudt - både mænd, kvinder og børn, fortæller Thangarajah på 46 år, der er lejrens leder.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Landsbyens beboere flygtede til lejren Chenkalady, hvor de boede i en måned. Så rykkede den indiske fredbevarende styrke ind i Sri Lanka, og familierne følte sig trygge nok til at vende hjem.

Freden holdt i fire år. Da inderne trak sig ud af landet, blussede stridighederne mellem De Tamilske Tigre og den singalesiske regeringshær op på ny. Mange folk blev drevet ud, fordi de var bange, og senere i 1990 blev byen endeligt overtaget af hæren, der rykkede ind og lavede byen om til en militærlejr. Den er bare en af ti militære baser i området.

Der boede 2000 mennesker i Periwapullumalai, og frem til 1990 mistede 362 af dem livet. Mange af dem blev fængslet og aldrig løsladt siden. Vi er sikre på, at de er døde nu. Andre blev slået ihjel på åben gade og smidt i grøften eller brændt, husker Thangerajah.

## Lever på otte kvadratmeter

Siden da har de mest velstående familier fra landsbyen fundet sig et nyt hjem i selve Baticaloa by. Resten bor her i Zahira-lejren. Det er en sørgelig samling af små hytter, der er lavet af tørrede palmeblade. Der bor 20 familier under samme tag med godt otte kvadratmeter til hver familie. Kun et par lave skille vægge sikrer en smule privatliv.

Elektricitiet er en luksus i Zahira. Om aftenen samles familierne omkring olielamperne, men olien er dyr, og rationerne slipper hurtigt op. Livet i lejren kører på lavt blus.

Adikan Krishnaverni bøjer ryggen og kanter sig ind gennem den snævre indgang til familiens hjem. En lille firkant med sand, et par kludetæpper og et lille ildsted med et par reoler, der er lavet af sammenbundne grene. Over vores hoveder hænger tøj på snore, og i hjørnet står et par små kufferter.

Alt, hvad Krishnaverni ejer, er i dette rum.Det dyrebareste har hun dog i sine arme: Den adopterede datter Sugikala på 3 år.Jeg var ved at blive sindsyg over at have mistet min lille søn, siger Krishnaverni.Jeg ville have et andet barn, og så fandt jeg Sugikala på hospitalet. Hun var kun tre dage gammel, og ingen ville have hende. Så fik jeg hende. Hun giver mig håb.

Der bliver hastigt lagt et par tæpper på det fugtige sand, så folk kan sidde ned. Alt udenfor er vådt. Regntiden er på sit højeste, og en stor sø står bare ti centimeter fra husene.Den 16 årig Subramani er ikke hjemme. Krishnaverni forklarer, at han er taget til byen for at tjene penge. I dag hjælper han med at sælge grøntsager på markedet, men ellers hugger han brænde, hjælper snedkeren eller bærer tunge ting for folk.

Regeringen giver os mad, men det er ikke ret meget. Vi får ris, mel, sukker og linser til en værdi af 510 rupees( ca. 65 kroner) om måneden , og det kan vi ikke leve af. Derfor har min søn droppet skolen her i lejren for at hjælpe mig, siger Krishnaverni.

## Et ringe håb.

De mange beboere i Zahira-lejren ved ikke, hvor længe de skal blive i lejren. Selvarajah, en ung mand på 28, har dog ikke meget håb.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-Når freden kommer, og vi kan tage tilbage til vores landsby, vil vi alle sammen være gamle mænd. Vores generation kommer til at bo her i flygtningelejren. Vi har tradition for at overlade vores værdier til vores børn, men hvad kan jeg gøre for mine børn, når jeg bor her i lejren.

Der ligger dog det svage håb i dem, at valget af den nye præsident kan gøre en forskel. Chandrika Kumaratunga gik til valg på fred, og i østprovinsen stemte 85% af vælgerne på hende. Hvis nogen kan hjælpe os hjem til landsbyen, må det være hende, lyder det.

Det er længe siden, at nogen har været hjemme i landsbyen. Men de ved, at husene er revet halvt ned, at alt træ er fjernet, og at de ellers så frugtbare marker ligger øde hen.

Det har dog ikke fået Krishnaverni til at hade singaleserne.

-Alle de forfærdelige ting, der er sket, vil altid være indeni mig, men hvis freden kommer, håber jeg, at vi alle kan leve sammen igen. Det er kun hæren, der har skadet os, ikke det singlesiske folk.

Herning , d. 12.01.95

## Information fra Dansk Flygtningehjælp i Herning

### Syning for kvinder.

Da vi de næste 3 måneder har en ansat, Pia, som er dygtig til syning, har vi udvidet systnens åbningstid, så vi fremover har åbent to dage om ugen, mandag og onsdag fra kl. 13 til 17.

Så hvis du vil sy, eller lære at sy, og være sammen med andre kvinder, er du velkommen i syværkstedet i **Vestergade 41**. Det er gratis at deltage

Med venlig hilsen
Per og Mahes

## டெனிஸ் அகதிகள் உதவிச்சங்கம் கேர்ணிங் பிரிவின் அறிவித்தல்

பெண்களுக்கு தையற்பயிற்சி

தையலில் அனுபவமும் திறமையும் உள்ள Pia, அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கு **Vestergade 41, Herning,** ல், தையற்பயிற்சி அளிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளார் . இவ் வகுப்புகள் இலவசமாக திங்கள்கிழமையும், புதன்கிழமையும் மாலை 13.00 மணி முதல் 17.00 மணிவரையும் நடைபெறும். தையல் பயிலவிரும்புவர்களும், தைக்கவிரும்புவர்களும் பங்கு கொள்ளவும்.

நன்றி,
Per og Mahes



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மெல்லிய தீச்சுவாலையில் ஒரு வாழ்க்கை

## சோகமான நிலை

இலங்கையின் கிழக்குப் பகுதியில் 242 தமிழ்க் குடும்பங்களுடன் அமைக்கப்பட்டது தான் ஷாஹிரா அகதிகள் முகாம். இங்குள்ள தமிழ் அகதிகள் தங்களின் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிப் போவதற்கு இன்னமும் எத்தனை வருடங்கள் ஆகுமோ என்று தெரியாமல் பெரும் ஏக்கத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

ஆதிக்கன் கிருஷ்ணவேணி தங்களின் குடும்பத்தாரின் உணவுப் பங்கீட்டு அட்டையை எடுத்துக் கொண்டு வருவதற்காக காலை ஏழு மணியளவில் வீட்டைவிட்டுப் புறப்பட்டிருந்தார் இதற்கு சற்றுமுன்னதாகத் தான் நிலக்கண்ணி வெடித்தது. பின்பு தான் அறிந்தார் விடுதலைப் புலிகளின் நிலக்கண்ணி வெடித்து ஆறு இராணுவத்தினர் இறந்தார்கள் என்று. தனது கணவனும், இரண்டு மகன்களும் வீட்டில்தான் இருந்தார்கள், இருந்தும் இந்த நிலையில் தான் வீட்டிற்குச் சென்றால் தனக்கு ஆபத்து ஏற்படும் என்று கிருஷ்ணவேணிக்கு நன்றாகத் தெரியும். ஆகவே பங்கீட்டு அட்டையை எடுத்துவரச் சென்ற கிருஷ்ணவேணி உடனடியாக வீட்டிற்கு வராமல் மற்றவர்களைப் போல தானும் காட்டிற்குள் மறைந்து இருந்தாள். மறுநாள் மிகத்துணிவுடன் காட்டைவிட்டுப் புறப்பட்டு தனது வீட்டிற்கு வந்தாள். அப்பொழுது அவளுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது முதல்நாளே அவளது கணவனையும், 5 வயதான இளைய மகனையும் இராணுவத்தினர் பிடித்துக் கொண்டு சென்றுவிட்டனர். அதேவேளை மூத்த மகனான சுப்பிரமணி இராணுவத்தினர் வந்த பொழுது ஒளிந்திருந்த படியினால் அவன் பிடிபடாமல் தப்பிவிட்டான்.

இந்தப் பயங்கரமான கண்ணிவெடிச் சம்பவம் 1986ம் ஆண்டு நடைபெற்றது. அன்றிலிருந்து இன்றுவரை கிருஷ்ணவேணி தனது கணவனையும், இளையமகனையும் பார்க்கவேயில்லை. இடையில் கிருஷ்ணவேணி இழந்தவர்களைத் தேடுமுகமாக மட்டக்களப்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்துடனும், சமாதானக் குழுக்களுடனும் தொடர்பு கொண்டு தனது கணவனையும், மகனையும் பற்றிய தகவல் ஏதாவது தெரியுமா என்று கேட்டாள். ஆனால் அவர்கள் எவருக்குமே ஒன்றுமே தெரியவில்லை. ஆகவே தனது கணவனும், இளைய மகனும் இப்போ இறந்து விட்டார்கள் என்றே கிருஷ்ணவேணி நினைத்துக் கொண்டிருக்கிறாள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்குறிப்பிட்ட ஷாஹிரா அகதிகள் முகாமானது மட்டக்களப்பில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்த முகாமில் உள்ள அனைவரும் பேரிவாப்புல்லுமலைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகும். இங்குள்ள 242 குடும்பங்களில் ஒரு குடும்பமாக 49 வயதுள்ள கிருஷ்ணவேணி தனது 16 வயதுள்ள மூத்தமகனுடன் வசித்து வருகிறாள். இங்குள்ளவர்களது கிராமத்தை இலங்கை இராணுவத்தினர் சூழ்ந்து கொண்டதனால் இவர்கள் அங்கு போகும் எண்ணத்தையே கைவிட்டுவிட்டார்கள். இந்தநிலையில் நாம் எமது கிராமத்திற்கு திரும்பிச் சென்றால், எங்களது மகன்களை நிச்சயம் நாம் இழக்க வேண்டிவரும் என்றும், எங்கள் மகள்களை இராணுவத்தினர் கற்பழித்து விடுவார்கள் என்றும் மேற்படி முகாமில் உள்ள இன்னுமொரு தாயார் கூறினார்.

## இந்த முகாமின் தலைவரான 46 வயதுள்ள தங்கராஜா என்பவர் 1986ம் ஆண்டு கண்ணிவெடிப்புச் சம்பவத்தைப் பற்றிக் கூறும்பொழுது

அன்றைய தினம் இலங்கை இராணுவம் எமது கிராமத்தைச் சுற்றி வளைத்து ஆண்கள, பெண்கள், குழந்தைகள் என்று பாராமல் 62 பேரைச் சுட்டுக் கொன்றது என்று கூறினார். எனவே அக்கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் தப்பி ஓடிவந்து செங்கலடி முகாமில் சுமார் ஒரு மாதகாலம் இருந்தனர். பின்னர் இந்திய சமாதானப் படையினர் இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்தனர். அப்பொழுது அனேக குடும்பத்தினர் தங்களது கிராமத்திற்குத் திரும்பிப் போகலாம் என எண்ணிக் கொண்டிருந்தனர். சுமார் நான்கு வருடகாலம் அமைதி காக்கப்பட்டது. இந்திய இராணுவம் இலங்கையைவிட்டு வெளியேறியவுடனேயே மீண்டும் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்தினருக்குமிடையே பிரச்சினை ஆரம்பமாகி விட்டது. இதனால் அனேகர் வேறு இடங்களை நாடி ஓடிவிட்டனர். பின்னர் இராணுவத்தினர் அந்தக் கிராமத்தையே இராணுவத் தளமாக மாற்றிவிட்டனர்.

பேரிவாப்புல்லுமலைக் கிராமத்தில் மொத்தம் 2000 பேர் வசித்தார்கள். அவர்களில் 362 பேர் இறந்து விட்டனர். இவர்களில் சிலரை இராணுவம் கைது செய்து சிறையில் அடைத்தது. பின்னர் ஒருபோதுமே இவர்களை விடுதலை செயய்வில்லை. ஆகவே இவர்கள் நிச்சயமாக இறந்து விட்டார்கள் என்று எமக்குத் தெரியும் என்றும், ஏனையோர் வீதிகளில் வைத்துக் கொல்லப்பட்டு குழியில் போடப்பட்டார்கள், அல்லது எரிக்கப்பட்டார்கள் என்றும் தங்கராஜா ஞாபகப்படுத்திக் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்கிராமத்தை விட்டு ஓடிவந்த வசதிபடைத்த சிலர் மட்டக்களப்பு நகரத்திலேயே வீடுகளில் வசிக்கிறார்கள். ஏனையோர் இந்த ஷாஹிரா முகாமில் வசிக்கிறார்கள். இம் முகாமில் மின்சாரத்தையே பார்க்க முடியாது. மண்ணெண்ணை விளக்குகளைத் தான் இவர்கள் பாவிக்கின்றார்கள். சிலவேளை அதுகூடக் கிடைக்காமல் ஒரு மெல்லிய தீச்சுவாலையில் தான் இவர்களின் வாழ்க்கைப் படகு செல்கின்றது.

மேற்சொல்லப்பட்ட கிருஷ்ணவேணியும், ஏனையோரும் மிகச்சிறிய குடிசைகளில் தான் வசிக்கின்றார்கள். ஆனால் கிருஷ்ணவேணி தற்போது மிக முக்கியமாக காத்து வருவது கையில் உள்ள அவளது 3 வயது நிரம்பிய சுவீகாரப்புத்திரி சுகிகலா தான். இந்தச் சுகிகலாவைப் பற்றிக் கூறும் பொழுது, நான் எனது இளைய மகனைப் பிரிந்த துக்கத்தினால் பைத்தியம் பிடித்தவளானேன். அந்த நிலையில் எனக்கு ஒரு பிள்ளை தேவைப்பட்டது. ஆகவே ஒரு வைத்தியசாலையில் சுகிகலா பிறந்த மூன்றாம் நாள் எவருமே அவளை எடுக்காத நிலையில் நான் அவளைப் பொறுப்பெற்றுக் கொண்டேன். சுகிகலாதான் எனக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தாள் என்று கிருஷ்ணவேணி கூறினார்.

தொடர்ந்து கிருஷ்ணவேணி கூறுகையில், அரசாங்கம் எமக்கு மாதாந்தம் 510, ரூபா (65 குறோனர்) பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்குகின்றது. ஆனால் அது எமக்கு போதுமானதாக இல்லை. எனவே எனது 16 வயதான மகன் சுப்பிரமணி தனது பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி மரக்கறி விற்றும் கூலி வேலை செய்தும் எங்கள் குடும்பத்தைப் பராமரிக்கின்றான் என்றார் கிருஷ்ணவேணி.

இந்த ஷாஹிரா முகாமில் உள்ளவர்கள் இன்னமும் எவ்வளவு காலம் இங்கேயே இருப்போம் என்று தெரியாத நிலையில் நம்பிக்கை இழந்துதான் வாழ்கிறார்கள் என்றார் இங்கே வசிக்கும் 28 வயதான வாலிபன் சிவராஜா.
யுத்தம் எல்லாம் ஓய்ந்து ஒரு அமைதியான நிலைமை ஏற்படுகின்ற பொழுது, நாம் எமது சொந்த ஊருக்குத் திரும்பி விடுவோம். அந்த நேரத்தில் நாம் எல்லோரும் வயோதிபர்கள் ஆகிவிடுவோம் என்றும், சிலவேளை எங்களது அடுத்தடுத்த சந்ததியினர்கள் இதே முகாமில் தான் இருக்க வேண்டிய நிலை என்றும், இப்படியே நான் முகாமில் இருந்து வாழ்க்கை நடாத்தினால் எனது பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு என்னால் என்ன செய்யமுடியும் என்றும் சிவராஜா கூறினார்.

தொடர்ச்சி...... 15 ம், பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Trist tilværelse** .Ikke alle tamiler når at flygte til den vestlige verden.I Srilankas hovedstad Colombo lever mange mennesker som fanger i deres eget land. De kommer aldrig udenfor en dør af frygt for at blive arresteret.

# Fanget i værelse 105

**Af Anders Laursen og Louise Holgersen**

TYVE trin op fra gadeniveau i et herberg ovenpå en isenkræmmerforretning i det ydre Colmbo bor 150 tamilske flygtninge. Alle er de stukket af fra det nordlig Sir Lanka, hvor helikopternes bombardementer og skudvekslingerne mellem regeringsstyrkerne og de tamilske tigre var så godt som daglig kost.

Tyve trin op fra ingnting lever de nu en dag ad gangen i hovedstaden i håbet om at blive genforenet med deres forsvundne familiemedlemmer, eller som det er sket for nogle af de heldigeat slippe væk til vesten.

## Skjuler sig for verden

Mange af de 150 flygtninge har mistet nære familiemedlemmer i en krig, som de nu selv er kommet på en vis afstand af.

I Colombo er de uden for kuglernes rækkevidde. Men angsten for at blive arresteret-mistænkt som støtter af De Tamilske Tiger - formørker tilværelsen for herbergets beboere.

Nu skjuler de sig for verden på i alt 36 små aflukker. Her forsøger de millimetertynde fineplader, som adskiller hvert rum, forgæves at sikre en sidste rest af privatlivets fred.

Mistilliden til myndighederne afspejler sig tydeligt ved mødet med et par danske journalister. Ingen har lyst til at stå frem, og den tamilske tolk forklarer, at flere af beboerne udtrykker frygt for, at de fremmede gæster er spioner for det hemmelige politi - Central Intelligence Department (CID).

## Frygt for spioner

En ung mand fortæller, at han har siddet i fængsel to måneder, hvor han blev tortureret, fordi politiet troede, at han var medlem af De Tamilsk tiger.

Men den unge mand stoler ikke på ukendte ansigter. Han har ikke lyst til at røbe sig, og kort efter er han forsvundet fra herberget.

En anden beboer, 26 årige Dhasan, overvinder dog sin angst. På herbergets tag, i ly for nysgerrige øjne og ører, fortæller han sin historie:

-Jeg kommer aldrig uden for en dør, fordi jeg er bange for alle singalesere. Problemet er bare, at man ikke kan vide, hvem der er almindelig singaleser, og hvem der er spion for CID.

-Fordelen ved at opholde sig inde er, at der altid er andrevidner i herberget, hvis politet kommer efter os. Bliver jeg arresteret af CID en aften på gaden, er der overhovedet ingen til at fortælle, hvad der egentlig sket, beretter Dhasan.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Dhasan bor på værelse 105. Her deler han sammen med fire andre enlige mænd seks kvadrameter og to madraser. Et enkelt neonrør skinner trist ned på de bare betonvægge.

Eneste pynt er nogle få udklip fra et kulørt blad. Udklippene afbilleder hinduguden Shiva, som Dhaasan tilbeder. Ejendelene begrænser sig til en lille brun sportstaske og en smule tøj, som hænger side om side med de andre mænds tøj om side med de andre mænds tøj på en tørrensnor.

Sportstasken gemmer de få personlige ting, Dhasan i febuar sidste år nåede at få med sig under flugten fra Jaffna-halvøen i det nordilge Sri Lanka.

-Under et af regerings-hærens bomberdementer blev hele min famile spredt. Ingen turde blive i byen, og vi løb hver vores vej for at komme i sikkerhed. Jeg forsatte selv med at, løbe, til jeg var kommet seks-syv kilometer ud i junglen mod syd, og jeg tænkte ikke på vende om igen.

I stedet satte Dhasan kurs mod Colombo, fordi han troede, at hans far, mor og fire søskende var flygtet samme vej. Men ved et militært check-point i byen Vavuniya på grænsen mellem regerings og tigerkontrolleret område, blev Dhasan imidlertid arrresteret.

-Militæret troede, at jeg var medlem af De Tamilske tiger, og de holdt mig fanget i fire dage. Under forhørene gennembankede de mig med plasticrør fylt med jord. Da de endelig løslod mig, truede de mig med, at hvis jeg fortalte noget til nogen, ville de anholde mig igen, husker Dhasan.

**Fire dage i hullet**

En måned efter flugten fra Jaffna ankom han til herberget i Colombo, men familien var ingen steder at finde. Og kort efter ankomsten til hovedstaden, blev han anholdt på ny.

CID kom midt om natten, og arresterede i alt 20 unge mennesker på en såkaldt rutineunundrsøgelse i huset. Sammen med 25-30 andre mennesker blev jeg smidt ind i en celle på cirka ni kvadratmeter.

-De tog alt undtagen undertøjet fra os, og så måtte vi ellers stå i cellen i fire dage. vi måtte simpelthen stå og læne os op ad hinanden, fortæller han.

Ingen af de anholdte blev på noget tidspunkt præsenteret for en sigtelse eller stillet for en dommer. Politiet forlangte i stedet 1000 ruppees(125 kroner) for at løslade dem. Det var der ingen, der havde råd til. Men efter fire dage blev alle alligevel sluppet fri.

Otte dage efter den sidste anholdelse kom politiet på " besøg" i huset igen, og endnu engang blev Dhasan udpeget til fire dages ophold i en celle under de samme forhold.

**Et live i angst**

Jeg er ikke blevet arresteret i de sidste ni måneder. Og det virker også som om her er blevet mere roligt, siden den nye præsident, Chandrika, kom til i november.

-Alligevel lever jeg i konstant angst for at blive arresteret igen. For nogle måneder siden blev en af mine bekendte, Shoba, taget, og han er aldrig vendt tilbage siden, fortæller Dhansan.

På herberget for driver han tiden med at sove, læse bøger, snakke med de andre



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



beboere og drømme om en tilværelse under helt ændre himmelstrøg end Sri Lanka.

-Hvis det lykkes regeringen at oprette en slags todelt Sri Lanka med lighed mellem tamiler og singalesere, vender jeg hjem til Jaffna. Der holder min familie stadig til - har jeg fået at vide. Men som det er nu, er der ingen steder i landet, hvor jeg kan føle mig tryg.

- Hvis jeg forsøgte at rejse tilbage, ville jeg måske blive arresteret på vejen, eller også ville jeg måske komme i klemme mellem tigrene og hæren. Den ene side ville mistænke mig for at støtte regeringen, og den anden side ville tro, at jeg var en af De Tamilske Tiger. Den risiko tør jeg ikke løbe. Lige nu håber jeg bare at få mulighed for at rejse væk fra Sri Lanka. Hvor hen ved jeg ikke bare væk, siger Dhasan.

Mod slutningen af besøget stimler en lille flok sammen på fortovet foran huset for at sige farvel. Men der bliver hurtigt uro i flokken. Beboerene har genkendt et par civilkædte CID- folk, og de føler nu, at politifolkene holder øje med dem.

To dage efter fortæller tolken, at her berget senere fik besøge af de to CID folk. De forhørte sig om, hvad to fremmede havde at gøre i herberget. Men ifølge tolken stillede de sig tilfredese med at to vestlige journalister var på besøg for at se, hvordan tamilske flygtninge havde indrettet sig i Colombo.

Ingen blev arresteret - denne gange.

*Dhasan navn er ændret, fordi han har betinget sig anonymitet. Redaktionen er be-kendt med hans rigtige navn.*

**12 ம் பக்கத் தொடர்ச்சி....**

இம் முகாமில் உள்ள பலருக்கு, புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றிருக்கும் சந்திரிகா குமாரணதுங்கா சமாதானத்திற்காக ஏதாவது ஒரு முயற்சி எடுப்பார் என்று ஒரு சிறு நம்பிக்கை இருக்கின்றது. இதனடிப்படையில் தான் கிழக்குமாகாணத்தில் உள்ள 85 வீதமான வாக்காளர்கள், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில், சந்திரிகாவுக்கு வாக்களித்தார்கள், என்று அறியக்கூடியாதகவிருந்தது.

இம்முகாமில் உள்ளவர்களின் வீடுகள், வயல்கள் யாவும் சேதம் அடைந்து விட்டன.

பேட்டியின் முடிவில் கிருஷ்ணவேணி — என்ன நடந்தாலும் எனக்குள்ளேயே நடந்து முடியட்டுக்கும். பிரச்சினை மட்டும் ஒழுங்காகத்தீர்ந்தால், நாம் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வோம் என்று நினைக்கிறேன் என்றும், சிங்களவர்களல்ல, சிங்கள இராணுவம் தான் எங்களைக் கொடுமைப்படுத்தியது, அதனால் சிங்களவர்களை நான் வெறுக்கவில்லை என்று கூறிமுடித்தார்.

குறிப்பு:- *மேலே எழுதப்பட்ட கட்டுரையானது டெனிஸ் பத்திரிகை நிருபர்களான* Anders Laursen, Louise Holgersen *ஆகியோர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து, அங்குள்ளவர்களை பேட்டி கண்டு, 1995 ம் ஆண்டு தைமாதம் 13-19 க்கான வார இறுதிப்பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமாகும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அறைக் கைதிகள்

(Fanget i værelset)

## பரிதாபகரமான வாழ்க்கை

இலங்கையிலுளள் எல்லாத் தமிழர்களாலும் மேற்கத்திய நாடுகளுக்கு வரமுடிவதில்லை. இலங்கையின் தலைநகரமான கொழும்பிலேயே அதிகமான தமிழர்கள் சொந்தநாட்டுக் கைதிகள் போன்று வாழ்கின்றார்கள். இவர்கள் அறையை விட்டு வெளியில் வந்தால் கைது செய்யப்படுவோமோ என்ற அச்சம் காரணமாக அறைக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

கொழும்பிற்கு வெளியே ஒரு இரும்புக் கடைக்கு மேலே உள்ள விடுதியில் 150 தமிழகதிகள் வசித்து வருகிறார்கள். இவர்கள் அனைவரும் வட பகுதியில் இலங்கை இராணுவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் காரணமாக அவ்விடத்தை விட்டு ஓடிவந்து இங்கே அகதிகளாக வசித்து வருகின்றனர். இந்த 150 அகதிகளில் பலர் வடபகுதியில் நடந்த யுத்தத்தில் தங்களது நெருங்கிய உறவினர்களை இழந்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு வசிப்பவர்கள் எவருமே எங்களுக்குப் பேட்டி கொடுப்பதற்கு முதலில் முன் வரவில்லை. ஏனெனில் நாங்களும் சிலவேளை அரசாங்க உளவுப்படையினரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என அவர்கள் எண்ணினார்கள்.

எங்களுடன் பேசிய ஒரு இளைஞன், தான் இரண்டு மாதங்கள் சிறையில் இருந்ததாகவும், தன்னை ஒரு விடுதலைப் புலி என்று பொலீஸார் எண்ணி சிறையில் அடித்து சித்திரவதைப் படுத்தியதாகவும் கூறினார். ஆனால் அவர் தெரியாத ஆட்களிடம் அதிகம் பேசாது சிறிது நேரத்தில் அங்கிருந்து சென்றுவிட்டார்.

இந்த விடுதியில் வசிக்கும் 26 வயதுள்ள தாசன் என்னும் இளைஞன் தனக்கு நடந்த சம்பவத்தைக் கூறும் பொழுது: நான் ஒரு பொழுதுமே அறையை விட்டு வெளியே வருவதில்லை, காரணம் அப்படியே வெளியே வந்தால் என்னைக் கைது செய்து விடுவார்கள் என்ற அச்சம் தான். ஏனெனில் யார் சாதாரண மனிதர், யார் இலங்கையின் உளவுப் படையினரைச் சேர்ந்தவர் என்று என்னால் இனங்கண்டு கொள்ள முடியவில்லை. அறையினுள் வந்து கைது செய்தால் ஏனையோருக்குத் தெரியக்கூடியதாக இருக்கும். ஆனால் வீதியில் என்னைக் கைது செய்தால் ஒருவருக்குமே ஒன்றுமே தெரியாமல் போய்விடும் என்று தாசன் மேலும் கூறினார்.

இந்த விடுதியில் தாசன் 105ம் இலக்க ஒரு சிறிய அறையில் ஏனைய நான்கு இளைஞர்களுடன் வசித்து வருகிறார். அந்த அறையில் தாசன் வணங்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிவபெருமானின் படமும், கயிற்றுக் கொடியில் சிறிதளவு ஆடையும், இரண்டு மெத்தையும் தான் உள்ளது. அதைவிட கடந்த வருடம் மாசி மாதம் யாழ் குடாநாட்டை விட்டு கொழும்புக்குத் தப்பி வந்த பொழுது கொண்டுவந்த ஒரு சின்னப் பையும் அங்கு தென்பட்டது.

## தாசன் மேலும் கூறுகையில்:

யாழ்ப்பாணத்தில் இலங்கை இராணுவத்தினரின் பயங்கரக் குண்டு வீச்சுக்களாலும், தாக்குதல்களாலும் எனது உறவினர்களும், ஏனையோரும் பாதுகாப்பைத் தேடி நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். எனவே நானும் அங்கிருந்து ஓடி காடுமேடெல்லாம் கடந்து கொழும்பை நோக்கி வருகின்ற பொழுது, நான் விடுதலைப் புலியைச் சேர்ந்தவன் என்று இராணுவத்தினர் என்னை வவுனியாவில் வைத்துக் கைது செய்து நான்கு நாட்கள் சிறையில் வைத்து அடித்துத் துன்புறுத்திய பின்னர், இங்கு நடந்தவற்றை யாரிடமாவது சொன்னால் மீண்டும் நீ கைது செய்யப் படுவாய் என்று மிரட்டித்தான் என்னை வெளியில் விட்டார்கள் என்று தாசன் கூறினான்.

அத்துடன் தாசன் கொழும்புக்கு வந்த சிலநாட்களில் தாசனையும் மற்றும் 25 – 30 இளைஞர்களையும் இலங்கையின் உளவுப்படையினர் கைது செய்து ஒரு மிகச் சிறிய அறையில் அடைத்து விட்டனர். அதைப்பற்றி தாசன் கூறுகையில் எங்களது அனைத்து ஆடைகளையும் கழற்றி விட்டு உள்ளாடையுடன் மட்டும்தான் எங்களை அந்த அறையில் போட்டார்கள். குளிப்பதற்கோ, அல்லது கழுவுவதற்கோ எந்த வசதியும் இல்லை. அதுமட்டுமல்லாது மலசலம் கழிப்பதற்குக் கூட நல்ல வசதியில்லாமல் நாங்கள் இருந்த அந்த மிகச்சிறிய அறையின் ஓர் மூலையில் உள்ள ஒரு சிறு குழியில்தான் மலசலம் கழிக்க வேண்டியிருந்தது. படுப்பதற்கென்ன இவ்வளவு பேரும் ஒழுங்காகக் கீழே இருப்பதற்குக் கூட அந்த அறை போதுமானதாக இருக்கவில்லை. அதுமட்டுமல்ல சிறையலடைக்கப்பட்ட எவரையுமே நீதிமன்றுமுன் ஆஜராக்கப்படவில்லை. ஆனால் பொலீஸார் எங்களை விடுதலை செய்வதற்கு 1.000/= ரூபாய் கேட்டார்கள். எங்கள் ஒருவரிடமும் பணம் இருக்கவில்லை. அப்படியிருந்தும் நான்கு நாட்கள் கழித்து எங்களை விடுதலை செய்தனர். பின்பு எட்டு நாட்கள் கழித்துப் பொலீஸார் எங்கள் விடுதிக்கு வந்து மீண்டும் ஒரு நான்கு நாட்கள் ஏற்கனவே இருந்த மாதிரி என்னை அந்தச் சிறிய அறையில் அடைத்து விட்டார்கள் என்று தாசன் மிகவும் சோகமாகக் கூறினார்.

தொடர்ந்து தாசன் கூறுகையில், கடந்த ஒன்பது மாதங்களாக நான் கைது செய்யப்படவில்லை, கடந்த நவம்பர் மாதத்தில் சந்திரிகா ஜனாதிபதியாக வந்ததில் இருந்து இங்கு கொஞ்சம் அமைதி நிலவுகின்றது. அப்படியிருந்தும் நான் மீண்டும் கைது செய்யப்படுவேனோ என்ற பயத்துடன்தான் வாழ்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொண்டிருக்கிறேன். ஏனெனில் சில மாதங்களுக்கு முன்னர் ஷோபா என்பவரைக் கைது செய்து கொண்டு போனார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை அவர் திரும்பியே வரவில்லை.

இலங்கை அரசாங்கம் ஒரு நல்ல முயற்சி எடுத்து, சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமாக சரியான முறையில் நாட்டைப் பிரித்துக் கொடுத்தால், நான் என்னுடைய குடும்பம் இருக்கும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவிடுவேன். ஆனால் இப்போ நான் யாழ்ப்பாணத்திற்குச் செல்வேனாயின் வழியில் கைது செய்யப்படுவேன், அல்லது அரசாங்கத்திற்கு ஆதரவாளன் என்ற எண்ணத்தில் விடுதலைப் புலிகளின் கையிலும், விடுலைப் புலிகளின் ஆதரவாளன் என்ற எண்ணத்தில் அரசாங்க இராணுவத்தினரின் கையிலும் அகப்பட வேண்டிய சாத்தியக் கூறுகள் உள்ளது. ஆகவே நான் இப்போதைய நிலையில் யாழ்ப்பாணம் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு ஏதாவது வெளிநாடு ஒன்றிற்கு போகும் வாய்ப்புக் கிடைக்குமாயின் அங்கே போவதற்கு ஆயத்த நிலையில் இருக்கிறேன். ஆனால் எங்கே போவது என்றுதான் தெரியவில்லை என்று மேலும் தாசன் கூறினார்.

எங்களது பேட்டி முடிவடைந்ததும், வெளியில் வந்து எங்களை வழியனுப்பி வைத்த அதேவேளை, அவர்களிடையே ஒரு பதட்டம் நிலவுவதை அவதானிக்க முடிந்தது. ஏனெனில் சாதாரண உடையில் வந்த இரண்டு அரசாங்க உளவுப்படையினர் இவர்களைக் கண்டுவிட்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து எங்களுக்கு உதவியாக வந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர் எங்களுடன் பேசுகையில், இரண்டு உளவுப்படையினர் அந்த விடுதிக்குச் சென்றதாகவும், இரண்டு டெனிஸ் பத்திரிகையாளர்கள் அங்கு ஏன் வந்தார்கள்? என்ன செய்தார்கள்? என்றெல்லாம் விசாரித்துச் சென்றதாகவும் கூறினார். அத்துடன் விடுதியில் உள்ள தமிழ் அகதிகள், டெனிஸ் பத்திரிகையாளர்கள் தங்களை நேரில் வந்து பார்த்துத் தங்களின் நிலைமைகளை அவதானித்துப் பேட்டியெடுத்ததையிட்டு மிகவும் திருப்தி கொண்டதாகவும், எமது மொழிபெயர்ப்பாளர் தெரிவித்தார். இறுதித் தடவையாக விடுதிக்கு வந்த உளவுப்படையினர் எவரையுமே கைது செய்யவில்லை என்ற தகவல் மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாகும்.

முற்றும்.

மேலே தரப்பட்டுள்ள கட்டுரையானது **ANDERS LAURSEN, LOUISE HOLGERSEN** என்னும் இரண்டு டெனிஸ் பத்திரிகையாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து, அங்குள்ள நிலைமைகளைப் பார்த்துவிட்டு டென்மார்க் வந்த பின்னர் 1995ம் ஆண்டு தை மாதம் 6 – 15ம் திகதி வரையிலான வார இறுதிப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமாகும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



NYT FRA SAMMENSLUTNINGEN AF TAMILSK-DANSKE FORENINGER

## NYE ARBEJDSOPGAVER

Vi har tidligere omtalt, at en af STDF's vigtigste opgaver er at arbejde med projekter, som de enkelte lokalforeninger ikke har mulighed for selv at klare, og som samtidig skal være til gavn for alle tamiler i Danmark.

Et eksempel på et sådant projekt var de weekendkurser for tamilske lærere, som blev gennemført i 1992-93 i samarbejde med Danmarks Lærerhøjskole. Som en fortsættelse af disse kurser er en mindre lærergruppe parat til at begynde på et påkrævet udviklingsarbejde, så snart det økonomiske grundlag er sikret. I 1994 har der været flere forberedende møder om den sag, ligesom der har været en første kontakt til Undervisningsministeriet.

Gennem året 1994 drøftede forretningsudvalget endnu to projekter, som nu ser ud til at kunne realiseres. For nogle år siden blev der med støtte fra bl.a. en række ministerier udgivet en bog med titlen Go'dag Danmark. Den udkom først på dansk og engelsk og indeholder en række meget nyttige og nødvendige oplysninger om det danske samfund til brug for fremmede i Danmark. For tiden er en serbokroatisk og en arabisk udgave ved at være klar til trykning. Vi har nu fået en aftale med Special-pædagogisk forlag i Herning om en udgivelse af bogen på tamil. STDF's opgave bliver da at sørge for oversættelse og for at skaffe de ca. 75.000 kr., som trykningen koster.

I løbet af 1994 blev vi gjort opmærksom på, at mennesker fra Asien bosat i Europa er særlig udsatte for at få sukkersyge. Dette gælder også tamiler. Vi har for ikke længe siden fået kontakt med nogle læger, som har særlig kendskab til denne sygdom. Tanken er nu, at vi - med hjælp fra disse læger og forhåbentlig økonomisk støtte fra et kendt medicinalfirma og fra sundhedsstyrelsen - prøver at fremstille et tamilsksproget, trykt materiale, som kan informere om, hvordan man skal forholde sig m.h.t. medicinsk behandling, diæt og lignende, hvis man bliver ramt af denne sygdom. Det er naturligvis en vanskelig opgave, vi hermed har påtaget os. Den vil tage lang tid at løse, men vi håber dog på held med den.

Siden oprettelsen i 1991 har STDF desværre haft en meget anstrengt økonomi. Vi kan derfor ikke påtage os mange store opgaver på samme tid. Først når ét projekt er afsluttet uden for store udgifter for STDF, tør vi gå videre til det næste. Man må derfor have tålmodighed m.h.t. at se konkrete resultater af arbejdet. Hvis vi derimod kunne få opbakning fra alle lokale tamilske foreninger og enkeltpersoner landet over, ville situationen være en helt anden.

Thorbjørn Lorentzen.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் – டெனிஸ் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பின் செய்தி

புதிய வேலைத் திட்டம்:

சிறிய உள்ளூர் ஒன்றியங்களினால் தனியே நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களை நடைமுறைப் படுத்துவதே ஒருங்கிணைப்பின் முக்கிய வேலை என முன்பு பல தடவை கூறியுள்ளோம். இப்படியான வேலைத் திட்டங்கள் டென்மார்க்கில் வாழுகின்ற எல்லாத் தமிழர்களையும் உள்ளடக்கியதாகும். 1992 – 93ம் ஆண்டுகளில் டென்மார்க் ஆசிரியர் உயர்பயிற்சிக் கல்லூரியில், வார விடுமுறைகளில் தமிழ் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்கள் ஒரு உதாரணமாகும். இப்படிப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினர், இன்னும் இப்பயிற்சியை விரிவாக்குவதற்கான செயற் திட்டத்தின் ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். பொருளாதார வசதி நிறைவு பெற்றதும், பயிற்சி விரிவடையும். 94மஆண்டில், ஆரம்ப வேலைகளுக்கான சந்திப்புகள் இடம் பெற்றன. கல்வி அமைச்சுடன தொடர்வு ஏற்படத்தப்பட்டுள்ளது.
94ம் ஆண்டில், ஒருங்கிணைப்பின் தெரிவுக்குழுவானது இரண்டு முக்கிய திட்டங்களை விவாதித்துள்ளது. வெகு விரைவில் இவ் இரு திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றது.

டென்மார்க் சமுதாயத்தைப்பற்றி முக்கிய செய்திகளை உள்ளடக்கிய Go´dag டென்மார்க் என்ற பெயரைக் கொண்ட கைநூல் ஒன்று, பல அமைச்சுக்களின் ஆதரவுடன் முதல் தடவையாக டெனிஸ் மொழியிலும், ஆங்கிலத்திலும வெளிவந்தது. இதனைத்தொடர்ந்து அரபு மொழியிலும், சேர்பியோகிரேட்டிஸ் மொழியிலும் வெகு விரைவில் வெளிவரவிருக்கின்றது. இந் நூலானது வெளிநாட்டவர்களுக்கு பல வழிகளில் டெனிஸ் சமுதாயத்தபைப்பற்றி அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். அதனால் ஒருங்கிணைப்பானது இக்கைநூலை தமிழில் பிரசுரிப்பதற்காக Herningல் உள்ள Special-pædagogisk என்ற பிரசுரிப்பாளருடன் தொடர்பு கொண்டுள்ளது. ஒன்றிணைப்பானது மொழி பெயர்ப்பிற்கும், பிரசுரிப்பதற்குமான செலவினை பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பிரசுரிக்கும் செலவானது 75,000 குரோனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் வாழும் ஆசியக்கண்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களில் பலர் நீரிழிவு ( சலரோகம்) நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை சென்ற ஆண்டு அறிந்தோம். இதனுள் தமிழர்களும் அடங்குகிறார்கள். இந் நோய் பற்றிய விஷேட வைத்தியர்களுடன் எங்களுக்கு தொடர்புகள் முன்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கவில்லை. இப்படியான விஷேட வைத்தியர்களின் உதவியுடன் அந்த நோய் பற்றிய விபரங்கள், என்ன விதமான உணவு உண்ண வேண்டும் போன்ற விபரங்களைக்கொண்ட பிரசுரங்களை வெளியிடுவதற்கு முயற்ச்சி செய்து வருகிறோம். டென்மார்க்கிலுள்ள பிரபலமான மருந்து உற்பத்தி செய்யும் ஸ்தாபனமிடமிருந்தும், டெனிஸ் சுகாதார நிர்வாக பிரிவிடமிருந்தும் இதற்கான பொருளாதார உதவியினை எதிர்பார்க்கிறோம். இது ஒரு சிக்கலான, கஸ்டமான வேலைத்திட்டமாகும். இதனை நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

1991ம் ஆண்டு இவ் ஒருங்கிணைப்பை ஆரம்பித்ததில் இருந்து, பொருளாதார நெருக்கடி இருந்தே வருகின்றது. அதனால் பல திட்டங்களை ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது. ஒருங்கிணைப்பின் பொருளாதாரத்தைப் பாதிக்காதவாறு ஒரு திட்டத்தினை நிறைவேற்றிய பின்பே மற்றைய திட்டத்திற்கும் போகக் கூடிய வசதியுண்டு. அதனால் திட்டங்களின் பயன்களைப் பெறுவதற்கு பொறுமையாக இருக்க வேண்டும். தனிநபர்களும், பிராந்திய ரீதியாகவுள்ள ஒன்றியங்களும் பொருளாதார உதவி வழங்குவார்களாயின் நிலைமை வேறாகும்.

*–தோபியோன்–*
தலைவர்
ஒருங்கிணைப்பு



***Hvis jeres børn har fødselsdag, så vil vi gerne ønske dem tilykke i bladet. Ønsker I at få en fødselsdaghilsen ? send navn, fødsels dato og billede.***

*தங்களது பிள்ளைகளின் பிறந்த தின வாழ்த்துக்கள் "கற்பகம்" இதழில் இடம் பெற வேண்டுமானால் பிள்ளையின் பெயர், பிறந்ததிகதி, போட்டோ போன்ற விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Kragen og slangen.

For mange år siden i en indisk landsby, hvor der var mange træer, var der specielt et stort træ. I dette træ boede der en krage. Den havde boet der længe, den havde lavet en flot rede, og den havde lagt æg.
Men ved træets rod boede en slange, og hver gang kragen havde lagt æg i sin rede, snoede slangen sig op i træet og åd dem. Kragen blev selvfølgeligt meget ked af det, og meget vred på slangen. Kragen spekulerede på, hvordan hun kunne komme slangen til livs. Men hun kunne ikke selv dræbe slangen. Så måtte hun tænke sig godt om.
I nærheden af kragens træ var der en sø, hvor dronningen badede (da hun intet badeværelse havde på slottet). Dronningen havde mange vagter med både mandlige og kvindelige. Vagterne dannede kreds om hende med kvinderne i den inderste kreds. Dronningen havde mange meget fine og kostbare smykker. Dem tog hun af, når hun skulle bade, og lagde dem ved søbredden.
Kragen havde fået en god ide. En dag, da dronningen badede, fløj kragen ned til søbredden og tog en meget smuk og kostbar perlehalskæde.
Piger ne råbte: "Kragen stjæler smykker", og vagterne løb efter kragen.
Kragen fløj tilbage til sit træ , og smed perlekæden ned i hullet til slangen. Vagterne kom til, og de ville have fat i perlekæden igen. De stod rund om træet og diskuterede, hvordan de skulle få fat i den. I det samme stak slangen hovedet op for at se, hvad der foregik. Lige idet slangen stak hovedet op, huggede en af vagterne hovedet af slangen med sit sværd. Derefter ødelagde vagterne slangens rede, og fandt perlehalskæden.
Fra den dag af kunne kragen have sine æg i fred, og den levede lykkeligt,
Af denne historie kan man lære, at uanset hvor store problemer man har, så kan man hurtigt løse dem, hvis man tænker sig grudigt om.

**Tamilsk folkeevntyr oversat og bearbejdet af David George og Gitte Helbo.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## De tre fisk

Der var engang en lille sø. I den boede der mange fisk. Der var tre fisk, der var blevet rigtig gode venner. De tre fisk havde meget forskellige karakterer.
Den ene fisk var en meget mistænksom fisk, som ikke altid troede på det, de andre sagde, og som havde meget svært ved at tage en beslutning. Den anden fisk var en meget klog fisk, som sagtens kunne klare sig.
Den tredie fisk var en bange fisk, som gjorde, som de andre sagde.
En dag kom en flok fiskere ned til søen. De blev meget begejstrede, da de så, hvor mange fisk der var i den. En af fiskerne sagde, at han ville komme igen næste dag og fange fiskene.
Den bange fisk havde været tæt inde ved søbredden, hvor den havde hørt, hvad fiskeren sagde. Den svømmede hurtigt hen til sine venner og fortalte, at fiskerne ville komme næste dag og fange alle fiskene.
Den kloge fisk sagde: "Så vil det være en god ide at komme væk herfra og gemme sig".
Den bange fisk svømmede straks væk og gemte sig.
Den kloge fisk ville ikke selv forlade søen, da den var meget glad for at være der, og fordi den var sikker på, at den kunne klare sig.
Den mistænksomme fisk troede ikke rigtigt påå, at det passede, at fiskeren ville komme, og hvis det alligevel skulle passe, kunne den ikke rigtigt bestemme sig til, hvad den skulle gøre,
Fiskeren kom igen næste morgen. Han fangede den mistænksomme og den kloge fisk. Den bage fisk så han ikke. Den havde jo gemt sig.
Da fiskeren tog nettet op af vandet, lod den kloge fisk, som om den var død. Da fiskeren så det, smed han den ud igen. Han ville ikke have selvdøde fisk med hjem. Den mistænksomme fisk derimod sprællede vildt for at komme tilbage til søen igen. Fiskeren så det, og slog den straks ihjel. Han ville jo ikke have, at den stak af fra ham.
Så hvis du er mistænksom og ikke tror på andre, og du har svært ved at tage en beslutning, kan du nemt komme til at ødelægge dit eget liv.

**Tamilsk folkeevntyr oversat og bearbejdet af David George og Gitte Helbo.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சிறுவர் பகுதி

**அன்பான தம்பி தங்கைகளே, இந்த மலர் ஏட்டில் இருந்து உங்களைச் சந்திக்க விரும்புகின்றேன். இந்த இதழில் ஒரு கதை ஒன்றைச் சொல்லுகின்றேன்.**

இந்தக் கதையில் இருந்து எமது தம்பி தங்கைகள் எந்த அளவில் மாமாவின் கதையை புரிந்து கொண்டு, நீங்களும் இது போன்ற கதைகளை உங்கள் கற்பனைகளுடன் சேர்த்து மாமாவுக்கு எழுதுங்கள். பிரசுரிக்கக்கூடிய தரமுள்ள கதைகளை சிறுவர்களுக்கான பகுதியில் பிரசுரிப்போம். மாமா என்றும் ஆவலுடன் உங்கள் பதிலை வழிமேல் விழிவைத்து காத்திருப்பேன். அடுத்து வரும் இதழில் சிறுவர்களுக்கான குட்டிக் கதைகளும், கவிதைகள் என்பனவும், பழமொழிகள் என்பனவும் வெளிவரும் என்பதையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். ஆவலுடன் எதிர்பாருங்கள்.

மாமாவின் ஆக்கங்கள் மட்டுமல்ல நம் தமிழ்ச்சிறார்களின் ஆக்கங்களும் வெளிவரவேண்டும் என்பது தான் எமது ஆசை.......

இந்த மாத இதழில் கீழே வரும் ஆக்கங்கள் இடம்பெறுகின்றன.

1. இவை மூன்றும் நம் வாழ்வில் (கவிதை).
2. யார் கூற்றுச்சரி (தொடர்கதை 1ம் பாகம்)
3. நண்பர்கள் என்றால் (கவிதை) எழுதி யவர் — டின்னாராம், வயது — 11
4. விவசாயும் வறுமையும் (சிறுகதை)

சிறுவர் மாமாவாக எழுதுபவர்
உங்கள் சின்னமணியான்

## இவை மூன்றும் நம் வாழவில்...............
## கல்வி, உ ண்மை, நேர்மை.

அன்பு என்னும் மூன்றெழுத்தால்
ஆண்டவனைத் தொழுதிடுவோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்பா என்னும் மூன்றெழுத்தால்
தரணியிலே உருவானோம்.
அன்னை என்னும் கோயிலினிலே – பத்து
மாதங்கள் குடியிருந்தோம்.
இவை மூன்றும் கண்கண்ட
தெய்வம் என்றிடுவோம்.

தமிழ் மகனாய்ப் பிறப்பதற்கு
தவம் செய்ய வேண்டுமென்பேன்.
தவப் பயனே எம்மவர் தம்
பழம் பண்பாடு என்கின்றேன்.
உயிர் மேலாய் ஒழுக்கத்தை
ஓம்பி வளர்த்திடுவோம்.
இவை மூன்றும் நம் வாழ்வின்
வழி காட்டி என்றிடுவோம்.

கல்வியை நாம் பொறுமையுடன்
கற்றுத் தேர்ந்திடுவோம்.
உண்மை என்னும் சத்தியத்தை
உலகினிலே போற்றிடுவோம்.
நேர்மையே நம் கண்கள் என
என்றென்றும் போற்றிடுவோம்.
இவை மூன்றும் நம் வாழ்வில்
உயிரென்று காத்திடுவோம்




## நண்பர்கள் என்றால்......?

நண்பாக்கள் என்றால் — நாம்
சேர்ந்து விளையாடும் கூட்டம்.
நண்பன் என்றால் துன்பத்தைக்களையும்
பண்பு வேண்டும்.
பள்ளியிலும் ஓய்விலும்

www.tamilarangam.net



பல கதைகள் பேசிடுவோம்.
நேரம் தெரியாமல் மணிக்கணக்கு
இல்லாமல் சோம்பல் இல்லாமல்
சுத்தித் திரிந்திடுவோம்.
நம்வாழ்வில் தொடர்ந்துவரும் — சொந்தங்களில்
நண்பனும் ஒன்றென்பேன்.
அது உண்மை என்பேன்.

– டின்னாராம் –

(வயது 11)

*யார் கூற்றுச் சரி*

ரகுபரன் மனதிலே ஆயிரம் கேள்விகள், எண்ணக் குவியல்கள் ஆனால் அவற்றிற்கான விடையைக் காண யாரைத் தேடுவது என்பது அவனுக்கு மிகமிகச் சிக்கலான விடயம். அம்மாவை, அப்பாவை அல்லது பாஸ்கர் மாமாவைக் கேட்கலாம், கேட்டால் ஒரே மாதிரியான விடைதான் கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியும். அம்மா அடிக்கடி கூறுவா நாம் தமிழர் நீ டெனிஷ்காரப் பிள்ளையளை மாதிரி எல்லாம் செய்யலாம் என்று நினையாதை என்று......
அப்பா கூறுவார் ரகுபரா உனக்கு ஏன் டெனிஷ்காரப் பிள்ளையளைப் பற்றிக் கேள்வி நீ படிக்கப் போகிறாய் அதுதான் முக்கியம். ரீச்சர் செல்லுவதை கவனமாய் கேட்டுப்படி கெட்டிக்காரனாக இரு. பள்ளிக்கூடத்திலை ரீச்சரை எதிர்த்து கேள்விகள் கேளாதை கோபப்படுவா... அப்படித்தான் நாங்களும் படிச்சனாங்கள். நாங்கள் எல்லாம் அந்தக் காலத்திலை என்று தொடங்கி தன் இலங்கை பள்ளிக்கூட ஏட்டைப் புரட்டத் தொடங்கி விட்டார். அதைக் கேட்டு முடியும் மட்டும் நான் விகேலாது. அதை நான் 1860 தடவை கேட்டுவிட்டேன். ஆனால் என் கேள்விக்கோ சரியான பதிலை நான் பெற முடியாது.
ரகுபரன் சிந்தித்தான். பாஸ்கரன் மாமா ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் மாலை நேரங்களில் எமது வீட்டுக்கு வருவார். அவரிடம் எனது எண்ண அலைக் கொந்தளிப்பைக் கேட்போமோ என்று ஆனால்!!! அவனுக்குத் தெரியும் அவரும் அப்பாவும் ஏறக்குறைய ஒரே தரமான விடையையே கூறுவார்கள். எனவே 6ம் வகுப்பு மாணவன் அவன் தன் கேள்விக்கு விடைதேடி பல மணிக்கணக்காய் அமர்ந்திருந்தான் சிந்தித்தான் சிந்தித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரகு.... நீ என்ன உந்த அறையுக்கை படிக்கிறியே பாடங்கள் செய்திட்டியே. நான் கடைக்கு சாமான் வாங்கப் போறன். தம்பியைப் பார்க்கிறியே நான் வரும் மட்டும் நான் ஒரு மணித்தியாலத்திக்கை வந்திடுவன் என்று அம்மா கூறியது எனது எண்ணத்தை திசை திருப்பியது.

சரியம்மா!!! என்று கூறிக்கொண்டு சிவா படுத்திருக்கும் இடத்திற்கு வந்தான் ரகு. கதவை கவனமாய்ப் பூ ட்டிப் போட்டு. சிலவேளை நான் வருகிறதுக் கிடையில் சிவாணி அக்கா வருவா அவ வந்தால் இருக்கச் சொல்லு நான் வந்திடுவன். என்று கூறிக் கொண்டு வெளியே சென்றாள் அம்மா.

இருண்ட வானிலே திடீரென விடிவெள்ளி எழுந்ததுபோல ரகுவின் மனதில் ஒரு ஆறுதல் அவன் சிவாணி அக்காவுடன் கதைக்கும் போதெல்லாம் அவன் வாழ்வில், பள்ளிக்கூடத்தில் உள்ள பொரும்பாலான வினாக்களுக்கு விடை கிடைத்திருக்கிறது. சிவாணி அக்கா இங்கு 10ம் வகுப்பு படிக்கிறா. அவவும் ரகுவின் பள்ளிக்கூடத்தில் படிப்பதால் ரகு அடிக்கடி சிவாணி அக்காவுடன் கதைப்பதுண்டு.

ரகு தன் வினாவுக்கான விடைகளைத் தேடும்போது ஒரு வழிப் பாதையில் அவன் பெற விரும்பவில்லை. அப்படி என்றால் தான் தன் நண்பர்கட்கும் தான் விடை கூற முடியும் என எண்ணினான். வாசற்கதவு மணி அடித்ததும் தம்பி சிவா எழுந்து அழத் தொடங்கி விட்டான். இன்றைக்கு சிவாணி அக்காவுடன் கதைத்த மாதிரித்தான். அம்மா தம்பியையும் கூட்டிக் கொண்டு போயிருந்தால் எவ்வளவு நல்லாய் இருந்திருக்குமென்று எண்ணினான். ஆனால் அம்மா கூறுவா தம்பி நீதானே அண்ணா அப்ப நீ தம்பியைப் பார்க்க வேணும் என்றும் நான் வெளியே போனால் ஓடி வந்திடுவன் என்றும் கூறுவா.

சரி சரி எனச் சிரித்தபடி கதவைத் திறக்க சிவாணியக்கா சிரித்தபடி ரகு என்ன தம்பி அழுறானே அம்மா நக்கிறாவே என்று கேட்டபடி உள்ளே வந்தா.

அம்மா கடைக்குப் போட்டா நீங்கள் வந்தால் இருக்கச் சொன்னவா. அம்மா வந்திடுவா நீங்கள் இருங்கோ என்றான் ரகு.

சிவாணியக்கா நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லுறன் ஆனால் நீங்கள் ஒருத்தருக்கும் சொல்லக் கூடாது. அம்மாவுக்கு முக்கியமாய் என்றான். ஆனால் எனக்கு அதைப்பற்றிப் பெரிய கேள்வி என்றான் ரகு.

உண்மையாய் நான் சொல்ல மாட்டன் நீ சொல்லு என்றா சிவாணியக்கா.

அக்கா உங்களுக்குத் தெரியும் தானே எங்கடை வகுப்பு அலனும், பிரியனும் நானும் நல்ல சினேகிதம் என்று. இண்டைக்கு என்ன செய்தவை தெரியுமோ. சொன்னால்த் தானே தெரியும் சொல்லு எனறு சிவாணியக்கா கூற, ரகு சொல்லத் தொடங்கினான்.

அக்கா இண்டைக்கு பள்ளிக்கூடம் முடிந்து பிறகு நாங்கள் மூன்று பேரும் சயிக்கிலில் வந்தம். அப்ப எங்கடை ரவுணிலை கியோஸ்க் கடியில்(Kiosk)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அலன் சொன்னான் ரகு இன்டைக்கு நாங்கள் புதிசாக ஒரு சாமான் வாங்குவம் என்று என்னவென்று எனக்கு விளங்கவில்லை. நானும் அவர்களுடன் கடைக்குப் போனேன். மூன்று பியர் வாங்கிக் கொண்டு எமது பூ ங்காவடிக்கு வந்தோம். பிரியன் உல்லை எடுத்து உடைத்தபடி ரகு நாங்கள் இண்டைக்கு சரியாய் குய்க்க (Hygge) பண்ணுவம் ஒவ்வொருதரும் ஒவ்வொன்று எடுப்பம் சரியே என்று கூறிய படி ஒரு உல்லை எனக்கு நீட்டினான். ஆனால் எனக்குத் தெரியும் நான் அதைக் குடிக்கக் கூடாது என்று. அதைக் குடித்தால் அப்பா எப்படித் தண்டனை தருவார் என்று. எனவே நான் சென்நான் எங்கடை அப்பா அம்மாவுக்கு நான் உல் குடிக்கிறது பிடியாது அவர்கள் கோபப் படுவார்கள் எனக்கு வேண்டாம் நீங்கள் குடியுங்கோ என்று. அதற்கு அலன் சொன்னான் ஏன் எங்கடை வீட்டிலை அப்பா, அம்மா, அக்கா எல்லோரும் நெடுகக் குடிக்கிறவை யாரும் வந்தாலும் தேத்தண்ணிக்குப் பதிலாக அதைத் தானே கொடுப்பம் என்று இதிலை வெறிக்கிற தன்மை இல்லையென்று அம்மா சொல்லுறவா என்று அலன் சொன்னான். எனக்கென்றால் என்ன சொல்லுறதென்று தெரியவில்லை ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும் அதை நான் குடித்தால் அப்பாவுக்கு கோபம் வரும் என்று. எனவே நான் மறுத்துவிட்டு அங்கு நண்பர்கள் குடித்து முடித்து வரும்வரை காத்திருந்தேன். ஆனால் என் மனதில் ஆயிரம் வினாக்கள், எண்ண அலைகள் அப்போது தான் எனக்கு ஞாபகம் வந்தது ஒரு வரி நான் சிந்து என்ற புத்தகத்தில் வாசித்தது. அதாவது சிறுபாண்மைத் தமிழரும், பெரும்பான்மை டெனிஷ் இனமும் இணைவாக்கம் பெறுவதின் முக்கியத்துவம் பாடசாலையில் நாம் டெனிஷ் பிள்ளைகளுடன் மொழி, பழக்கம், நட்பு, பொழுது போக்கு எல்லாவற்றிலும் இணைந்து போவதென்றால் எப்படி எதை நாம் கடைப்பிடிப்பது வீட்டில் பெற்றார் கூறும் நம் தமிழ் பண்பாட்டையா..? அல்லது பாடசாலையிலும், நண்பர்களிடத்திலும், ஆசிரியரிடத்திலும் கேட்கும் டெனிஷ் பண்பாட்டையா..? என்னால் என்ன செய்வதென்று தெரியவில்லை சிவாணியக்கா.....

நான் பிரியனுக்கு உல் வேண்டாம் என்றும், அப்பா பேசுவார் என்றும் கூறியதால் நம் நட்புப் பிரியுமா....? அல்லது எனது சக நண்பர்களைப் போல நானும் அன்று உல்லைக் குடித்திருக்க வேண்டுமா....? நான் மட்டுமல்ல என்னைப் போன்ற சக தமழ்ச் சகோதரர்கள எல்லோருமே இப்படியான இரட்டைப் பண்பாடடில் மூழ்கி முக்குழிக்கிறார்களா? எனத் தன் உள்ளத்து உணர்வுகளைக் கொட்டிக் கொண்டிருந்தபோது........(அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# விவசாயும் வறுமையும்

சங்கரத்தையூ ர் என்னும் கிராமத்தில் மிக மிகப் பழைய காலத்திற்கு முதல் வறுமையான தோட்டக் காரனும் அவன் மனைவியும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குச் சொந்தமாக ஒரு சில வீட்டு மிருகங்களை வளர்த்து அதிலிருந்து வரும் பால், முட்டை, இறைச்சி என்பனவற்றைத் தமக்கு உணவாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

ஏறக்குறைய ஒரு வருடங்களாக வீட்டு மிருகங்கள் எந்தவித விருத்தியையும் கொடுக்கவில்லை. கோழிகள் முட்டையிட மறந்தன. மாடுகளில் இருந்து பால் எடுக்க முடியவில்லை. வறுமை கொடுமையை விட கூடிக்கொண்டு வந்தது. விவசாயி தன் மிருகங்களுக்கு ஏதாவது உணவு போடலாம் எனத் தானியம் இருக்கும் அறைக்குள் போனபோது அதற்குள் கொஞ்சமாவது இல்லாமல் வெறுமையாக இருந்தது. என்ன செய்வது தன் பக்கத்து வீட்டுக்காரரிடம் ஏதாவது கடனாக வாங்குவோமா.... எனத் தன் மனைவியுடன் வெளியில் புறப்பட்டான். பக்கத்து வீட்டுக் கதவைத் தட்டிய போது ஒருவருமே கதவைத் திறக்கவில்லை. ஒரே காற்றும் மழையும் விடாது பெய்து கொண்டிருந்தது. மரங்கள் ஒன்றோடொன்று மோதி பெரிய சத்தத்தை எழுப்பின.

இருவரும் மிகக் கவலையுடன் வீடு திரும்பிவந்தனர். வழியில் மிக அடர்த்தியான பெருங்காடு பெரும் சத்தத்திலும், கும் இருட்டிலும் இருவரின் உள்ளத்திலும் பயம் குடிகொண்டது. ஆனால் ஒருவருக்கொருவர் பயத்தை வெளிப்படுத்தாது ஒருவரின் துணையை மற்றவர் வெளிக்காட்டாது வந்து கொண்டிருந்தபோது ஒரு மின்னல் கண்ணைப் பிளப்பது போல வானத்தில் தோன்றி மறைந்தது. அவர்களுக்கு முன்னே திடீரென ஒரு கிழவர் சாக்கு நிறைய சுமக்க முடியாத ஒரு சுமையைச் சுமந்து வந்துகொண்டிருந்தார். பாரம் தாங்க முடியாமல் அந்தக் காற்றிலும் மழையினிலும் கஷ்டப்பட்டு அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தார்.

விவசாயும் மனைவியும் அம்முதிர்ந்த கிழவரின் துன்பத்தைக்கண்டு மனம் கலங்கினார்கள். அவர் அருகில் சென்று "அப்பு நீங்கள் அப்பாரத்தைச் சுமக்க முடியாது கஷ்ரப்படுகிறீர்கள். நீங்கள் விரும்பினால் அச்சாக்கை உங்கள் வீடுவரை சுமந்து வந்து தருகின்றோம் என விவசாயி கூறினான். பிறர் துன்பம் கண்டு அவர் துன்பம் துடைப்பதில் தங்கள் துன்பத்தை மறந்த விவசாயி சாக்கை கிழவரிடம் வாங்கி சுமக்கத் தொடங்கினார். சிறிது தூரம் சென்ற பின்பு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விவசாயி கிழவரிடம், உங்கள் வீடு எங்கே என்று கேட்டபோது, அதற்குக் கிழவர் என் வீடு மிகத் தொலைவில் உள்ளது. நீ உன் வீடு வரை இதைச் சுமந்து வா. இந்த இருள் நிறைந்த இரவில் என்னால் தொடர்ந்து என் வீட்டுக்குப் பயணம் செய்ய முடியாது. நீங்கள் ஓம் என்றால் இரவு உங்கள் வீட்டில் ஒரு ஓரத்தில் தங்கிவிட்டு நாளை விடிந்ததும் என் வீட்டுக்குப் போகலாம் என்றார். விவசாயும் மனைவியும் அதற்கச் சம்மதித்து வீட்டுக்கு அழைத்துச் சென்று தமக்கு உள்ள உணவில் ஒரு பகுதியைப் பகிர்ந்து கொடுத்து படுக்க வசதியும் செய்து கொடுத்தனர். கிழவர் விவசாயியை அருகில் அழைத்து தம்பி இந்தச் சாக்கில் உள்ள தானியத்தில் உனது மிருகங்களுக்கு கொஞ்சத்தைப் போடு, நானும் காலையில் மிகுதியை சுலபமாகச் சுமக்க முடியும் என்றார். விவசாயி பன்முறை நன்றிகூறி மிக மகிழ்ச்சியுடன் மிருகங்களுக்கு தானியத்தைப் போட்டான்.

காலை மலர்ந்ததும் விவசாயி எழுந்து வயது
முதிர்ந்த கிழவரைக் காணவில்லை. மூட்டை
நிறைய அவர்கள் நம்பமுடியாத அளவு வெள்ளியும் பொன்னும் நிரம்பி இருந்தது.

தங்கள் மிருகங்கள் இருந்த இடத்தைப் போய்ப் பார்த்த போது கோழிகள் முட்டையிடனும் குஞ்சுகளுடனும் கொஞ்சிக்குலாவின. பசுக்கள் தம் கன்றுகளுடன் மடி நிறைந்த பாலுடன் காட்சியளித்தன. இவற்றைப் பார்த்து மனம் பூ ரிப்படைந்த விவசாயிக்கும் மனைவிக்கும் ஒன்று மட்டும் ஞாபகம் வந்தது. "பிறர் துன்பத்தை நாம் துடைத்தால் நம் துன்பத்தை இறைவன் துடைப்பார்" என்பது இருவரும் மிகச் சந்தோஷமாக வறுமையின்றி வாழ்ந்து வந்தனர்.

சின்னமணியான் வரைகின்றார்

தம்பி தங்கைகளே!
உங்கள் கற்பனையையும் இனிப்பு கலந்த சுவையுடன் மாமாவுக்கு எழுதுங்கள், பிரசுரிப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரம்

அவள் நிமிர்ந்து கிடந்தாள், நான் அதிர்ந்து போனேன், மயக்கமயாய்... பேச்சுமூச்சற்று..! கீழ்ச்சொண்டு பெரிதாய் மொத்தமாய்த் தெரிந்தது. கண்கள் மேலே சொருகி இருந்தது, பயத்தை மேலும் அதிகரித்தது. கட்டிலின் மெத்தை தொக்கையாய் இருந்தது. ஆஸ்பத்திரி மணம் மூக்கைப் பிடுங்கியது. வெள்ளைநிற தாதிகளும் டொக்டர்களும் சுற்றிவர நின்று குசுகுசுத்தார்கள். மார்பகங்கள் இயக்கமேதுமில்லாது இடமும் வலமுமாய் சிதைந்து தன் பாட்டில் கிடந்தன. அரை நிர்வாண கோலத்தில் அவளைக் கிடத்திமிருந்தார்கள். காலையில் ஒன்றும் நடக்கவில்லை. இது நடந்து 2 மணிநேரம் இருக்கும். என்னவளைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. அனாதர வானவள் போல் யாருமற்ற அனாதைப் பிரேதம் போல் கட்டையாய்,.... ஒரு சருகாய்.... கிடந்தாள். வேர்த்துக் கொட்டியது எனக்கு! வேலை முடிந்து வந்த நான் பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் சேதியறிந்து துடித்துப் பதைத்து வந்து..... ஆஸ்பத்திரி தேடி Ward தேடி.... வந்து பார்த்தபோது கண்ட தரிசனம் இது, ஒன்றுமே புரிய வில்லை. யாரைக் கேட்கலாம்? டொக்டரைக் கேட்கலாம். கேட்டேன். "You are Lucky" என்றார். "ஏன்? "கொஞ்சம் பிந்தியிருந்தால் ஆளைக் காப்பாற்றியிருக்க முடியாது என்றார் "ஏன்?" "உற்பத்தியான கரு, கருப்பையில் தங்கவில்லை. வேறொரு குழாயில் தங்கியிருந்தது. அந்தக் குழாய் கருவைத் தாங்கும் வல்லமையற்றது. அது வெடிக்கும்! வெடித்தால் அது நஞ்சாகும். நஞ்சினை இரத்த நாடிகள் உடலெங்கும் கொண்டு செல்லும். உடலே நஞ்சாகும். பின்னர் ஆள் தப்புவதற்கான Chances 0.01 % தான் "எல்லாம் விளங்கிவிட்டேன் டொக்டர்" என்று மட்டும் சொன்னேன் ஆச்சரியமாய் இருந்தது எனக்கு. எல்லாம் தான். விளக்கமும் தான். இதுக்கு என்ன வழி?"

"அந்தக் குழாயை வெட்ட வேண்டியது தான்" வெட்டியாச்சோ? இப்ப 1 மணித்தியாலமும் 38 நிமிசமும் ஆகுது என்றார் சிரித்தபடி.

இனி? பிள்ளை பிறக்கிறதுக்கான Chance ஐக் கேக்கிறீரோ?

மனித உடலின் அமைப்பு இனப் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைக்கப் பட்டிருக்கிறது. ஒரு குழாயை வெட்டினால் மறு குழாமிற கூடாக கருக்கட்டல் நடக்கும். 50% Chance உண்டு. ஆனால் உம்முடைய Wife வின்ரை மற்றக் குழாயும் பழுதடைந்துள்ளது. இதனால Chance 12% தான்.

நான் கேட்காமலே சொல்லி முடித்தார். எனக்கு ஏதோ வீதக் கணக்குப் படிப்பது போல் பட்டது. எனினும் இனி குழந்தை கிடைக்காது என்பது மட்டும் ஏனோ தெளிவாய்த் தெரிந்தது. எவ்வளவு ஆர்வத்துடனும் ஆசை யுடனும் இருந்தாள் அவள். ஆண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குழந்தையே பிறக்குமெனத் திடமாக நம்பினாள். பெயர் வைப்பது வரை அவள் மனக் கோட்டை கட்டி யிருந்தாள். பிள்ளைக்கான துணி மணி சேர்ப்பதிலும் ஆர்வங் காட்டியிருந்தாள். அவளுக்கு இப்படி நடந்திருக்கக் கூடாது என மனம் சொல்லிற்று. எப்படியெனினும் அவளைத் தேற்ற வேண்டும் என்ற முடிவை எடுத்துக் கொண்டேன். அவள் கண் விழிக்க இன்னும் 2 மணி நேரமாவது செல்லும் என்றாள் தலையில் பெரிய நீத்துப்பெட்டி போன்ற ஒன்றைக் கிளிப் பண்ணிக் கொண்ட தாதி. அவள்தான் அங்கு பெரியதாதியாக இருக்க வெண்டும். இல்லையெனின் அவளது குரலில் இவ்வளவு உறுதி தொனித்தி ருக்காது.

என்னவளின் தலையை மட்டும் ஒரு பாவியாய் வெளியே வருடிவிட்டு Visiting hall க்கு வந்து 2 சிகரட்டுகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பற்றினேன்.

இரண்டு வாரங்கள் கழித்து ஆஸ்பத்திரியிலிருந்து கைத் தாங்கலாக Tax யில் ஏற்றி வீட்டை நோக்கி வருகையில் உங்களுக்கு ஒரு Present வாங்கி வைச்சிரு க்கிறேன் வீட்டை வந்து பாருங்கோ என்றேன். என்னது என்றாள் சொண்டு களை நாக்கால் நனைத்தபடி.

"வந்து பாருங்கோவன்"

Taxi வீடு வரும்வரை அவள் துருவித் துருவிக் கேட்கவே இல்லை. முன்னை மாதிரி இருந்திருந்தால் இந்நேரம் நான் சொல்லியே விட்டிருப்பேன். அவ் வளவுக்கு என்னைத் துளைத் தெடுக்காமல் விட்டிருக்க மாட்டாள். அவளது இந்த நிலைக்காக நான் மிகவும் அனுதாபப் பட்டேன். இந்த அதிர்ச்சி அவளை நன்றாகப் பாதித்து விட்டதை உணர்ந்தேன். வீட்டில் வந்து ஆற அமர இருந்த பின்னர் தான் கேட்டாள். "என்ன உங்கடை Present" முன்னால் இருந்த Room ஐச் சுட்டிக் காட்டி அங்கை போய்ப் பாருங்கோ என்றேன். நானும் பின்னால் தொடர்ந்தேன். கறுப்பு வெள்ளையில் ஒரு பெரிய கடதாசிப் பெட்டியின் மூலையில் அழகிய சிறிய பூ னை க்குட்டி உறங்கிக் கொண்டிருந்தது.

"ஐயோ நல்ல வடிவப்பா" என்றபடி..... மலர்ந்தபடி பூ னைக்குட்டியைத் தூக்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அவளின் சந்தோஷத்தில் நானும் என் தெரிவு பற்றிப் பெருமிதப் பட்டுக் கொண்டேன்.

"இது கடுவனோ பெட்டையோ" என்று கேட்டாள். "கடுவன் தான்" என்றேன் சிரித்தபடி.

என்ன பேர் வைப்பம்?

சும்மா எல்லாரும் வைக்கிற மாதிரி "ஜிம்மி, ஜாக்கி, ரொமி" என்று வைக்காமல் தமிழ்ப் பேரொண்டு வைப்பம் என்றேன்.

"ராஜா" என்று சொல்லிவிட்டு செல்லமாய் ஏக்கங்களை இல்லாமற்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்தான்.அதன் முகத்தருகே தன் முகத்தை கொண்டு சென்றாள் அது "மியாவ்" என்றது தன மழலையில். நாங்களிருவரும் எங்களை மறந்து சிரித்தோம். "ராஜா" நாம் இருவர் என்ற நிலையை நாம் மூவர் என்று மாற்றினான். துள்ளித்துள்ளி அங்கும் இங்கும் ஓடித் திரிந்தான். T.V.க்கு மேலே பாய்ந்து ஒரு அழகிய மண் சிலையை உடைத்து எங்களிடம் தாறுமாறாக ஏச்சு வாங்கினான். முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு விரல் இடுக்குகளால் பார்த்தாலும் தன்னைப் பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். தனது உணவைத் தானே கேட்டுப் பெற்றுக் கொண்டான். பல ஏக்கங்களை இல்லாமற் செய்தான்

ஒருநாள் எங்கள் வீட்டிற்கு ஒரு முதியவர் வந்தார். அவருக்கு மிருகங்களைப் பற்றி நன்கு தெரியும். அவர் ராஜாவை உற்றுப் பார்த்தார். நாங்களும் அவரைப் பார்த்தோம். அவர் ராஜாவைத் தூக்கி கால்களை அகட்டிப் பார்த்தார். பெட்டைப் பூனைக்கு ராஜா எண்டு பேர் வைக்கலாமோ என்றார். நாங்கள் அதிர்ந்து போய் ஆளையாள் பார்த்தோம். பெட்டைப் பூனையளை வீட்டிலை வைச்சிருக்கக் கூடாது என்றார். நாங்கள் ஆளையாள் பார்த்தோம். என்ன செய்வதென்று தெரியவில்லை. என்னவள் ஓடிச் சென்று "ராஜா" வைத் தூக்கி அணைத்தபடி "ராணி" என்றாள். எனக்கு ஒரே சந்தோஷமாய் இருந்தது. பிரச்சனை ஏதும் இல்லாமல் இந்தப் பிரச்சனை ஒரு சிறிய அணைப்பில் பெயர் மாற்றத்தில் தீர்ந்து போனதை வேடிக்கையாக நினைத்தேன்.

Party ஒன்றுக்குப் போய் வந்தோம். நல்ல Mood ல் இருவரும் இருந்தோம். "கலவி" ஒன்ற முடிந்து போயிற்று. அந்த நேரத்தில் முன் Room இலிருந்து "ராணி" பெரிதாக அழுதுகொண்டிருந்தாள்.

சோம்பலைப் பாராமல் எழுந்து சென்று பார்த்தேன். நிலத்தில் புரண்டு புரண்டு அழுதாள். என் கால்களை தன் முழு உடம்பினாலும் உரஞ்சித் தேய்த்தாள். உரத்த குரலில் "மியாவ்வோய், மியாவ்வோய்" என்று கத்தினாள். அவளது குரல் ஒரு மாதிரியாய் இருந்தது.

என்னப்பா நடந்தது என்றபடி என்னவளும் வந்துவிட்டாள். அவளுக்குப் பயமாய் இருந்தது. கிட்டப் போய்த் தூக்க முயன்றாள். ராணி புரண்டு புரண்டு கத்தினாள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ராணி தன் நாலு கால்களையும் அகல விரித்து தன் வயிறு முழுவதும் தரையில் படும்படி உரஞ்சிக் கொண்டு அரைந்தாள். எங்கள் கண்களை நேரே பார்த்து ஏதோ சொல்ல முனைந்தாள். அதே குரலில் கத்தினாள். இரவு பூராவும் கத்திக் கொண்டே இருந்தாள்.

விடிந்ததும் நான் அந்த முதியவரைக் கூட்டிக் கொண்டு வந்தேன். ராணியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு தடவை பார்த்துவிட்டுச் சொன்னார், "ராணி வயதுக்கு வந்து விட்டாள்" என்று. இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னனான் பெட்டைப் பூ னையளை வீட்டிலை வைச்சிருக் கப்படாது என்று மேலும் தொடர்ந்தார். நாங்கள் ஆளையாள் பார்த்தோம். இதுக்கு என்ன செய்யிறது?" என்றேன். "மனிசருக்குத் துணை மாதிரி அதுகளுக்கும் துணை வேணும், கல்வி வேணும், பிள்ளை வேணும், இனம் பெருக வேணும் எண்ட நியதி இருக்குத் தம்பி. இதைக் கொண்டு போய் காட்டிலை விடும். இல்லாட்டிக் "கருத்தடை" மாத்திரை இருக்கு. ஒரு மிருக வைத்திரியட்டைப் போய்க் கேட்டாத் தருவார். அதைக் குடுத்தீர் எண்டா இப்படிக் கத்தாது. ஏக்கம் இருக்காது. இது தான் வழி என்றார். நாங்கள் ஆளையாள் பார்த்தோம். நான் ராணியைப் பார்த்தேன். அது ஏக்கத்துடன் என்னைப் பார்த்தது. நான் என்னவளைப் பார்த்தேன். அவளும் அதே மாதிரி என்னைப் பார்ப்பது போல் பட்டது.

மூக்குக் கண்ணாடிக்குக் கீழால் என்னைப் பார்த்தபடி குழிகைகளை என்னிடம் தந்தார் அந்த மிருக வைத்தியர். நான் அவரைப் பார்த்தேன். என்ன பார்க்கிறீர்? இது Powerfull ஆன Pills. பிள்ளை உண்டாகிறதுக்கான Chances ஐக் கேட்கிறீரோ. 12 % தான் " என்றார்.

Pills ஐக் குடுப்பதற் என்னவள் தடுத்து விட்டாள். இருவருமாக ஒரு முடிவெடுத்தபின், ராணியைத் தூக்கிச் சென்று காட்டில் விட்டுவிட்டு வந்தோம். நீண்ட நாட்களின் பின் என்னவள் சாமிப் படத்தருகே நீண்ட நேரம் நின்றிருந்தாள், தெரியாதவன் போலவும், நிலைமையைச் சகஜ நிலைக்குக் கொண்டு வருவத ற்குமாய் "உங்கை என்ன செய்யிறீர்" என்று கேட்டேன். மிகத் தெளிவாக இயல்பாக "வரம்" என்று மட்டும் சொன்னாள்.

Company வேலை முடிந்த களைப்பில் Carஇல் வந்து கொண்டிருந்தேன். தூரத்தில் றோட்டுக் கரையோரத்தில் பற்றை களுக்கு அருகில் ஒரு பூ னை செத்துக் கிடந்தது. கண்கள் இறுக மூடின, கால்கள் 120 Kmph இல் Carஐ இயக்கின.

நீர் உங்கை என்ன செய்யிறீர்?

"வரம்"

நீங்கள் உங்கை என்ன செய்யிறியள்?

நீர் செய்யிற அதே வேலைதான், ஆனா இது வீதக் கணக்குஎன்றேன். என்னையும் அறியாமல் என் கண்கள் கலங்கின.

(யாவுமே கற்பனையல்ல)

க.ஆதவன்

நன்றி, ஓசை, பரிஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்ணிப்பார்! தோழா!!

எண்ணிப்பார்! எண்ணிப்பார்! தோழா.....! நாம்
எண்ணாத நாளுமோர் நாளா?
பண்ணில்லா பாட்டுமோர் பாட்டா.....? சொந்த
மண்ணில்லா வாழ்வுமோர் வாழ்வா?

கண்ணில்லா மனிதனைப் போல..... நல்ல
மண்ணில்லா பயிரினைப் போல....
எம்மினம் அழியுதே வாடி..... இதற்கு
எம்பணி என்னடா தோழா.....? (எண்ணி)

கூட்டினில் வாழ்ந்திடும் கிளியும்! பெரும்
காட்டினில் வாழ்ந்திடும் நரியும்– கூடி
கேக்குதே சுதந்திரம் இன்று.....! இதை
நோக்கல்லையோ நாமும் இன்று..... (எண்ணி)

பயிரும் நீரும் பகைமை கொண்டால்
பாரினில் பசுமை வந்திடுமா....?
உலக மக்கள் பசியைப் போக்கும்.....
உணவும் உலகில் கிடைத்திடுமோ.....?

ஏரும் எருதும் பகமை கொண்டால்
வயல் உழுது மறுக்க முடிந்திடுமா.....?
களையை பிடுங்குதல் என்றெண்ணி.....
நட்டபயிரை பிடுங்குதல் நன்றோ சொல்.....!

நீயும் அறிவாய் உன்பலத்தை.....
நானும் அறிவேன் என்பலத்தை..... நம்
பலவீனம் மற்றவர் அறியுமுன்னே..... இன
பற்றோடு நாமொன்றாய் இணைந்திடுவோம்.....

நீயும் நானும் பகைமைகொண்டு
நீழும் நாட்கள் துயரமுண்டு..... நம்
இனத்தின் பேரால் அன்புகொண்டு
இணைவோம் இன்றே நன்மையுண்டு.

நன்றி!
வேலணையூ ர் பொன்னண்ணா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# கல்தோன்றி மண்தோன்றா..

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்ற கவியடிகள் மனதைக் குடையும் போது ஒருவித பூ ரிப்பு ஏற்படுவது ஏதோ உண்மைதான். ஏனெனில் கல்தோன்றி மண்தோன்ற முன்னே தோன்றியவனல்லவா தமிழன்.

சென்ற இதழில் வெளியான கட்டுரையை வாசித்தபோது மேற் குறிப்பிட்ட வரிகள் ஒரு சிலருக் கிடையில் பலதரப்பட்ட கருத்துக்களை தோற்றுவித்துள்ளதை அறிய முடிகின்றது. இக்கவியைடிகளை "கற்பனை சுமக்கும் உண்மை" என்றே கருத வேண்டும். இதற்கு சான்று தேட விஞ்ஞான உலகில் சற்று சஞ்சரிக்க வேண்டியுள்ளது. உலகம் முதலில் அனலாக இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் கருது கிறார்கள. பூ மி தோன்றி சில நூறு கோடி ஆண்டுகளே என்பதும் இவர்கள் கருத்து. அனலாக இருந்த பூ மி முதல்முதல் தணியத் தொடங்கிய இடம் தமிழ் நாடு, இது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மை. தமிழ் நாட்டின் வெப்ப நிலை வன்மையோ, மென்மையோ இன்றி இடைமை பெற்று விளங்குவதையும் காணலாம்.

தமிழ் நாட்டின் முதன்மைத் தணிவும், தட்ப வெப்பநிலையும் அதைப் பலவழிகளிலும் பண்படுத்தின. அதனால் தமிழ் நாட்டின் பண்பாடு தொன்மையாயிற்று. முதன்மையும், தொன்மையும் வாய்ந்த பண்பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக் கொண்டன. கருக் கொள்ளல் இயல்பு. திருக்குறளுக்கு அணிந்துரை எழுதிய போது திரு. வி.கல்யாண சுந்தரன் அவர்கள் மேற் கூறியுள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

எனவே உயிர்கள் கருக் கொண்ட முதல் இடம் தமிழ் நாடாக இருக்கலாம் எனக் கருத இடம் உண்டு. இந்தியா முதல் ஆபிரிக்கா வரை ஒரே நிலப்பரப்பாக இருந்த காலமும் உண்டு. கடல் கோள் ஏற்பட்டு இவை பிரிபட்டன என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். "சிந்திக்கும் மனிதன்" தோன்றிய பரிணாமத்தில் முதல் கட்டம் ஆபிரிக்காவில் தோன்றியதாக கருதப்படுகின்றது.

சிந்திக்கும் மனிதரகத்தின் மிச்சங்கள் 1959ம் ஆண்டில் டாக்டர் லூயி லீக்கி என்னும் பிரிட்டிஷ் தொல்பொருள் நிபுணர் ஆபிரிக்காவில் கண்டெடுத்தார். இம் மனிதனின் பரம்பரையினர் ஆசியா, ஐரோப்பா நாடுகளில் நடமாடியிருக்கிறார்கள் எனவும் அறியமுடிகிறது. கி.மு. 500,000 ஆம் வருடத்திற்கு முன் வாழ்ந்த ஆதிமனிதன் கிழக்கு இந்தியத் தீவுகளில் ஒன்றான ஜாவாவில் வாழ்ந்ததாகவும், இவரை ஒத்த வேறு ஒருவர் சீனாவின் பீக்கிங் நகரத்திலும் வாழ்ந்ததாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெகுகாலத்திற்கு முன் இறந்து போன இவ்விருவரின் தோற்றமும் ஒரே மாதிரியாக இருப்பதால் இவர்கள் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என மனித இயல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இவற்றை எல்லாம் ஒப்பிட்டு நோக்கும் போது கடல் கோள் ஏற்பட்ட காரணங்களால் உண்மை களை நிரூபிக்கும் சான்றுகளை இந்தியா பெருமளவில் இழந்திருக்கலாம்.

நாகரீகத்தில் மேம்பட்டு விளங்கிய பண்டைத் தமிழ்க் குடியில் தோன்றிய புலவன் மேற்கூறிய ஆராய்ச்சிகளுக்கு ஒப்ப சிந்தித்து உண்மையை சற்று மெருகூட்டி "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்று கூறி வைத்தான்.

இராமாயணத்தில் இராமனின் அழகை வர்ணிக்க முயன்ற கம்பன் அவன் அழகை எடுத்துக் கூற முடியாது தவித்து ஈற்றில்.... கார்முகிலோ... ஐயோ!... என முடிப்பதைப் போல தமிழ்க் குடியின் தொன்மையை ஒப்பிட வழியற்ற புலவன் கல்லையும், மண்ணையும் துணைக்கு அழைத்திருக்கலாம்.

உயிர்கள் அமைதியாக தங்களின் இயல்புகளை மாற்றிக் கொள்ளும் என்ற பிரெஞ்சுக்கார தாவரவியல் அறிஞரின் வாதத்தை நிராகரித்து புதிய விளக்கம் சென்னவர் பிரபல பிரிட்டிஷ் உயிரியல் அறிஞர் சார்லஸ் டார்வின். இயற்கையாகவே உயிர்களுக்கிடையில் போராட்டம் தொடங்குகிறது. இதில் வலுவுள்ள உயிர்கள் பிழைக்கின்றன, வலுவற்றவை அழிகின்றன என்பது இவரின் வாதம். இக்கருத்துடன் கவியடிகளை இணைத்து நோக்கும் போது புலவன் போராட்டம் பற்றிய சிந்தனையை சேர்த்து....... "வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி" என எழுதியிருக்கலாம்.

உயிர்களின் பரிணாமத்திற்கு முன் ஒலி உருவாகிவிட்டது. எனினும் சிந்தனை பெற்ற மனிதனால் அவை பட்டை தீட்டப்பட்டு பல மொழிகளாயின. தொன்மை வாய்ந்த மொழிகளில் தமிழும் ஒன்று. எனினும் முதல்த்தோன்றிய மொழி என்பதில் பல வேறுபாடுகள் இருந்தே வருகின்றது. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்" என்று இருக்குமேயானால் அவ்வப்போது சொல் நுழைவுகள் ஏற்பட்டிருக்காது. மொழியின் தொன்மையை சிதைத்து குடியின் தொன்மையை நிலைநாட்டும் அவசியம் ஏற்பட்டிருக்காது என்றே கருத வேண்டும். எது எத்தகையதாக இருப்பினும் தமிழ்க் குடியின் தொன்மையை கூறுவதற்கு ஏற்படுத் தப்பட்ட மரபுசார் வாய்ப்பாடு எனக்கூறி முடிப்பது சாலப் பொருந்தும்.

— பரம் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத் தமிழர் நாகரிகம்

– பாலபண்டிதர் கே. ஜெயக்குமார் –

(மேற்படி, தலைப்பில் தஞ்சாவூ ரில் நடைபெற்ற 8வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கென எழுதி அனுப்பப் பெற்று அங்கீகாரம் பெற்ற ஆய்வுக் கட்டுரையின் சுருக்கக் கருத்துரை.)

'ஈழம் சிங்கள பௌத்தர்களின் நாடு' என்பதனூடாக ஊட்டப் பெற்ற இன, மத வெறிகளும் 'தமிழ் நாட்டு மன்னர்களின் ஆதிக்கத்தால் சிங்களர் கலாச்சாரம் அழிந்து பட்டது' எனும் ஆவேச வரலாறுகளும், சிங்கள இனத்தைப் பூ தாகரப் படுத்தி இருக்க, அதனூடே காலங்காலமாகக் கட்டவிழ்த்து விடப்பெற்று வந்த இனப் படுகொலைகளின் ஒரு காட்சியை, இந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் 4ம் ஆண்டுப் பராயம் கண் முன்னே கண்டு கண்ணீர் சிந்தியிருக்கிறது.

'ஈழத் தமிழர்' சிங்களர், கூறுவது போல் கள்ளத் தோணிகள் தானா? எனக் கலங்கிப் போயிருந்த தமிழன்னை இன்று 8வது படிக்கட்டில் எட்டி நிற்கும் போது, தனது குழப்பம் நீங்கப் பெற்றவளாகப் புன்னகைத்து நிற்பது எதனால்?

அது சிங்களரை நாகரிக மனிதராக்கிப் பௌத்த தருமத்தை ஊட்டி, கடல் கடந்த நாடுகள் தோறும் கலம் ஓட்டி, தனது நாகரிகத்தை எடுத்துச் சென்ற மூத்த குழந்தைகள் ஈழத் தமிழர்களே! என்பதை நினைவு கூர்ந்து விட்டதால் ஏற்பட்ட மலர்ச்சி.

ஈழத்தின் வரலாறு இயக்கர், நாகர், வேடருடன் ஆரம்பிக்கிறது. இதில் இயக்கர், வேடர் வழி சிங்களர் சமுதாயம் தனது வரலாற்றை எடுத்துச் சென்று ஆரிய மாயைக்குள் நின்று நாகரை இதிகாச புராண புருடர் ஆக்கிவிட்டது. ஈழத் தமிழனும் 'நாகரே' தமது மூதாதையர் என்பதை மறந்து "நாகதம்பிரானே"! எனக் கன்னத்தில் போட்டுக்கொண்டு வழிபாடியற்றி வாழ்ந்து விட்டான்.

"The domminance of foreign influence will confluence in the former concept of worship and will confront contradictory ideals and superstitions at a latter stage."

-Alfred Webber.

"அயல் கூறுகளின் ஆதிக்கம் முன்னைய வழிபாட்டுச் சிந்தனையில் படிந்து, பின்னாளில் முரண் முறைகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர் கொள்ள வைக்கும்." இவ்வாறு அல்பிரட் வெப்பர் கூறுகிறார்.

இவர்தம் கூற்றிற்கு, ஈழத்தின் வழிபாட்டு வரலாற்றுத் தடயங்கள் சான்று பகர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறைக்கு அணித்தா கவுள்ள 'நாகர் கோயில்' வரலாற்றுத் தொன்மை மிக்கது. இங்கே நாகவணக்கம் நடைபெறுகிறது. கடற்கரையை ஒட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


யுள்ள இப் பதியில் நாகர்தம் நாகரிகத்தை எடுத்தியம்பும் வரலாற்றுத் தடயங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

சங்க இலக்கியமாகப் பேசப்படும் தமிழ்ப் பௌத்த நூலான மணிமேகலையில் வரும் 'மணிபல்லவம்' எனும் தீவு இன்றைய 'நயினா தவீ' ஆகும். வரலாற்றுத் தொன்மை மிக்க இத் தீவில் நாக விகாரை, நாக பூ சணி அம்மன் (நாகர் பூ சித்த அம்மன்) ஆகிய பௌத்த, இந்துக் கோயில்கள் தம் பெருமையை இன்றும் பேசி நிற்கின்றன. துறவறம் எய்தி நின்ற மணிமேகலைக்குப் புத்தரின் தரிசனம் இம் மணிபல்லவத் தீவிலே கிடைத்ததை சீத்தலைச் சாத்தனாரது மணிமேகலை தெரிவிக்கிறது.

தென்மார்க்கின் தலைநகரான 'கூய்பன் காவன்' (**København**) வாங்கும் துறைமுகம் எனும் காரணப் பெயரால் அமைந்திருப்பது போல ஈழத்தில் மன்னாரில் உள்ள 'மாந்தை' (மா — சந்தை) வரலாற்றுத் தொன்மை மிக்கது. இங்கே உலகச் சந்தை நடைபெற்றதை வரலாற்றுத் தரவுகள் நிரூபிக்கின்றன. ஒரு காலத்தில் பெரிய துறைமுகப் பட்டினமாக விளங்கிய இப் பகுதியில் இருந்து கிடைக்கும் கிரேக்க, உரோம நாணயங்கள் இதன் பெறுமதியை இன்றும் காட்டி நிற்கின்றது.

இங்கே வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து குவிந்ததை "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" என கி.பி. 8ம் நூற்றாண்டினர் என்று பேசப்படும் சுந்தரமூர்த்தி நாயனாரது தேவாரம் இனங் காட்டுகிறது. கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தரது தேவாரம் "பாடல் வீணையர் பலபல சரிதையர்" என இங்கே எழுந்தருளி அருள் பாலிக்கும் திருக்கேதீச்சர நாதரை எடுத்தியம்புகிறது. திருக்கேதீச்சரம் பலபல சரித்திரங்களை கண்டு வந்த தகவலை கி.பி. 7ம் நூற்றாண்டு தெரிவிக்கிறது. சம்பந்தர், சுந்தரரின் பதிகங்களில் திருக்கேதீச்சரம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இத்தலம் முன்னர் 'திருப்பெருந்துறை' என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. வரலாற்றுத் தொன்மை மிக்க பழந் தமிழ்க் குடிகளான நாகர் வழிபட்ட திருப்பெருந்துறைச் சிவனே பின்னாளில் திருக்கேதீச்சரம், இராஜ இராஜேஸ்வரம் என்றெல்லாம் மாற்றம் பெற்றது என கலாநிதி எஸ். இராமச்சந்திர முதலியார் அவர்களது 'திருக்கேதீச்சர புராணம்' எடுத்தியம்புகிறது. பாளி மொழியில் 'மாதித்த' என்பது 'பெருந்துறை' எனப் பொருள்படும்.

தொடர்ச்சி 51 ம் பக்கம்..


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் அமைதி ஏற்படுமா?

## தமிழ்மக்களின் எதிர்காலம் குறித்து பல்வேறு ஊகங்கள்

-ரி.கே.தாசன்.

இலங்கைவாழ் தமிழ்ப்பேசும்மக்கள் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டு காலமாக இலங்கையில் அனுபவித்துவரும் இன்னல்களுக்கு ஓர் முடிவு ஏற்படுமா? என்கின்ற அவா ஒவ்வொரு தமிழர் மனத்திலும் நாளாந்தம் எழும்பிக்கொண்டிருக்கின்றது. இதற்கான பதிலை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நம்பிக்கைகளுடாக தமிழ்மக்கள் காலத்தை ஓட்டி வந்துள்ளனர். கடந்த காலங்கள் பல்வேறு அனுபவங்களை தமிழ்மக்களுக்கு புகட்டியுள்ளது. இதனாலேயோ என்னவோ தமிழ்மக்கள் இன்று வேண்டிநிற்ப தெல்லாம் அமைதி, சமாதானம், சகவாழ்வு என்கின்ற அடிப்படையில் ஓர் நிரந்தரத்தீர்வு. இதற்கான அத்திவாரத்தை இன்றுள்ள அரசியற்தலைவர்கள் தமிழ்மக்களின் நலன்கருதி போடுவார்களா!

### இணக்கம்

இன்றுள்ள இலங்கை அரசு வெளிப்படையாக ஓர் இணக்கத்திற்குவர தயாராகிவிட்டது என்பது உண்மை. இதில் பல சந்தேகங்கள் எழுப்புவதில் நியாயமில்லை. அதற்காக யாரும் உத்தரவாதமும் கொடுக்கமுடியாது. ஏனெனில் இன்றைய யனாதிபதி சந்திரிகாவின் முயற்சிக்கு இடையூறு விளைவிக்க பல சக்திகள் உள்ளும் வெளியேயும் முற்பட்டிருக்கும் இவ்வேளையில் எதிர்கால நிலமை எப்படிமாறும் என்பதை கணிப்பது மிகவும் கடினம்.

இலங்கைவாழ்தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சனைகளைப் போலவே, தென்னாபிரிக்கர்களும், பாலஸ்தீனியர்களும் தமது பிரச்சனைகளுக்கு ஓர் தீர்வுக்கு வரவில்லையா? ஏன் நம்மவர்களால் முடியாது. இன்றைய இந்த இணக்கத்திற்கான சூழ்நிலையை பயன்படுத்தி தமிழ்மக்களின் இன்றைய தேவைகளை நிவர்த்தி செய்ய எல்லாத்தரப்பினரும் மனம்விட்டு முனைவார்களேயானால் தமிழ்மக்களுக்குள்ள எதிர்கால அச்சுறுத்தல்கள் தணிய வாய்ப்புகள் உண்டு. இல்லாவிடில் மிகப்பாரிய அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் ஏற்பட வழிவகுத்தவர்களாகிவிடுவோம்.

### சிங்களதேசியம்.

இலங்கையில் சிங்கள அரசியலிலும் என்றுமில்லாத மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. முற்போக்குவாதிகள் மக்கள் மத்தியில் சமாதானத்திற்கான எண்ணப்பாடுகளை தீவிரமாக ஏற்படுத்தி வருகின்றனர். பெரும்பான்மை சிங்கள மக்களும் தமது கடந்தகால தவறுகளை உணரத்தலைப்பட்டுள்ளனர். இதனாலேயே புதிய அரசு உருவாக தமது முழு ஆதரவை கொடுத்தனர். இச்சூழ்நிலையில் பழைய இனவாத சிங்கள தேசியத்தலைவர்கள் மீண்டும் தமது அரசியல் செல்வாக்கை ஏற்படுத்த இத்தருணத்தில் முற்படுவது அவர்களது முட்டாள்த்தனத்தையே வெளிப்படுத்துகிறது.

### வெளிநாடுகளில் தமிழர்கள்

இன்று வெளிநாடுகளில் வதியும் தமிழ்மக்களும் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகிவருவதும், அச்சுறுத்தப்படுவதும் எதிர்காலம் குறித்து கேள்விக்குறியே எழுப்பப்படுகின்றது. தமிழ்மக்களின் வெளிநாடுகளுக்கான இடம்பெயர்வு ஒரு பிரத்தியேகமான வடிவம். இதற்கு தனியான ஆய்வு வேண்டும். இந்த இடம்பெயர்வு தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பதை இலங்கையின் அரசியல்தான் தீர்மானிக்க வேண்டும். இதேநேரத்தில் வெளிநாடுகளில் வதியும் தமிழ்மக்களின் வளர்ந்துவரும் சந்ததியினரது எதிர்காலம் குறித்து பெரும் இக்கட்டானசூழ்நிலை வளர்ந்து வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் தமது கலை, கலாச்சார பண்பாடுகளைப் பேணிப்-பாதுகாக்க வேண்டுமாயின் அவர்களுக்கென நிரந்தரமான, பாதுகாப்பான ஓர் இடம் அவசியம். இதனுடனான இணைப்பைக் கொண்டே எதையும் செய்யமுடியும். இல்லாவிடில் எதையும் சுதந்திரமாகச் செய்ய முடியாது. வெளிநாடுகளில் வதியும் கலை ஆர்வம் கொண்டோர் தமது ஆத்ம திருப்திக்காக அவ்வப்போது ஏதும் செய்யலாம். ஆனால் இவை எவ்வளவு தூரம் தமிழ் மக்களின் சமூக ஒற்றுமைக்கும், மேம்பாட்டிற்கும் வழிவகுக்கும் என்பது கேள்விக்குறியே!

தமிழ்மக்கள் வதியும் ஒவ்வொரு அந்நியநாடுகளும் தத்தமது நாடு, மொழி, கலை, கலாச்சாரம் என்பவற்றை பேணுவதிலும், வெளிநாட்டவரை தமது சமூகங்களுடன் ஒன்றிணைப்பதிலேயே மிகவும் அக்கறை காட்டிவருகின்றன. இந்தப்பிடிக்குள் அகப்படுவதா அல்லது தப்பித்துக்கொள்வதா என்பது பலரிடையே இருக்கும் குழப்பம். இதைத்தீர்ப்பது மிகவும் கடினம். சில நாடுகள் தங்கள் நாட்டிற்கு வரும் அகதிகளை தற்காலிக இடங்களில் வைத்துக்கொண்டு எந்நேரமும் திருப்பியனுப்பும் நிலையில் இருக்கின்றன. இருந்தும் இதற்கான பதில் இலங்கையின் அரசியற் சூழ்நிலையைப் பொறுத்தே அமையும்.

## உலகநாடுகள்

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் யுத்த நிறுத்த உடன்பாடு நீடித்திருப்பதும், இதைக் கண்காணிக்கும் கண்காணிப்புக்குழுக்களுக்கு தலைமை தாங்க வெளிநாடுகளிலிருந்து பிரதிநிதிகள் ஈடுபட்டிருப்பதும் எதிர்காலம் குறித்து நல்ல எதிர்பார்ப்புக்களை மக்களுக்கும், உலகிற்கும் உருவாக்கிவருகின்றது. உலக நாடுகள் இலங்கையின் அரசியல் மாற்றத்திற்கு மேலும் அழுத்தத்தைக்கொடுக்க ஆரம்பித்-துள்ளன. நோர்வே, நெதர்லாந்து, கனடா ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளன. இதனடிப்-படையிலேயே பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். இலங்கைசென்று நாடு-திரும்பிய நோர்வே பிரதிநிதி ஒருவர் பத்திரிகை-களுக்குப்பேட்டியளிக்கையில், அங்கு நல்ல அமைதி நிலவுவதாகவும், தமிழ்மக்கள் பாதுகா-ப்பாக வாழக்கூடிய நிலமை உள்ளதென்றும் தெரிவித்ததைத்தொடர்ந்து அரசும், தொடர்புச்-சாதனங்களும் செய்திகளை மிகைப்படுத்தி ஓர் பதட்டநிலமையை உருவாக்கியுள்ளனர். இதுபோன்று தமிழ் அகதிகளைக்கொண்ட ஏனைய நாடுகளும் விரைவில் தமது அழுத்தங்களை ஏற்படுத்த முற்படும். இலங்கையில் ஒவ்வொரு தடவையும் சமாதான சூழ்நிலை எழும்பொழுது மேற்படியழுத்தங்கள் ஏற்படுகின்றன. இந்நாடுகள், இலங்கையில் ஓர் நிரந்தரமான அமைதி நிலவவும், தமிழ்மக்கள் பூரண சுதந்திரத்துடன் வாழவும் ஏதாவது ஆக்கபூர்வமான பணிகள் செய்கிறார்களோ என்றால் இல்லை.

## அரசியற்பிணைப்பு

இத்தகைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் எங்கும் அநாமதேயப்பிறப்புகள். இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் நம்மிடையே இறுக்கமான சமுக, அரசியற் பிணைப்பின்மையே. தமிழ் மக்களிடையே சமுக, அரசியல் முரண்பாடுகள் அளவிற்கதிகமாக வளர்ந்து நிற்கின்றது. இதன் பிரதிபலிப்பே இன்று நாம் அனுபவிக்கும் இடர்ப்பாடுகள். எல்லாச்சமுகங்களிலும் முரண்-பாடுகள் இருப்பது சகயம். ஆனால் அவை தத்தமது சமுகதேசியஒருமைப்பாட்டோடு சங்கமித்துவிடுகின்றன. ஆனால் அதுதான் நம்மிடையே இல்லையே. பதிலுக்கு தத்தமது அரசியல் ஒருமைப்பாட்டை——!

இன்றுள்ள சூழ்நிலையில் தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகள் எவ்வாறு இன்றுள்ள சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி தமிழ்மக்களின் இன்றுள்ள அடிப்படைத்தேவைகளை நிறைவுசெய்வார்களென்பது அவர்களது சாதுரியத்தைப்பொறுத்தது. இதிலிருந்து தவறுவோமாகில் நிச்சையம் எதிர்காலம் பேராபத்தாய் முடியவாய்ப்புண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அருவுருவம்

முல்லையூரான்

நெடுங்கதை (தொடர் )

2

ராம் செத்துப்போனான்தான். ஆனால் அவனைப்பற்றிய கதைகள் டென்மார்க்கின் அந்த நகரமெங்கும் பேசப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அவரவர் தமது அபிப்பிராயங்களினால் அவனது செயல்களை நியாயப்படுத்தியும், இறந்துவிட்டான் என்பதற்காகவே அவன்மீது இரக்கம்கொண்டு அவனது பக்கமாக நின்றுபேசினர்.

இந்தளவிற்கும் ராம் ஒரு பெரிய கொடுமைக்காரனல்ல.ஆனால் அவனது வாழ்க்கை சாதாரண ஒரு தமிழ்இளைஞனின் அகதிவாழ்க்கையைவிடவும் அது வித்தியாசமானதாகவே இருந்தது.
இன்று இவன்மீது சுமத்தப்படும் குற்றங்களுக்கு யார் காரணமென்றால் அது அவன்மட்டுமல்ல என்ற உண்மை புலப்படும். அவனை தூற்றுகின்ன இந்த சமூகம்தான் அவனது இறப்புக்கு காரணம் சொல்லவேண்டும். ஆனால் மாறாக அவனது இறப்பினை வைத்துக்கொண்டே மற்றய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளைஞர்களுக்கு அச்சமூகம் நீதி சொல்லி மகிழ்ந்திற்று. அவன்வசித்த அந்த நகரத்தில் வசிக்கும் பெரும்பான்மையான தமிழர்களும் அவனது உதவியை பெற்றிருந்தனர்தான். ஆனாலும் அவை ஒரு வாடகைக்கமர்த்தப்பட்ட கொலைகாரனைப்போன்ற நிலையில் வைத்துத்தான் சமூகம் அவனிலிருந்து பிரிந்துநின்று ஏதுமறியாததுபோல தன்னை காத்துக்கொண்டது. அவனது வாழ்க்கை வித்தியாசமானது என்பதுடன் அவனது பழக்கவழக்கங்கள் பல தமிழ்கலாச்சாரத்துக்கு ஒவ்வாததாக இருப்பதாக சமூகம் கண்ட சமூக முரண்பாடுகள் தமிழில் இல்லையா ? என்ற மாபெரும் சிக்கலான கேள்வியே ராமையும் சமூக்தையும் பிரித்து நின்றது.

அவனொரு வாயாடி. இளைஞன்.ஊர்க்குடும்பப்பொறுப்புகள் இல்லாதவன்.

தகப்பனார் மகாலிங்கசிவத்தார் ஒரு கல்லூரி அதிபர். தகப்பனாருக்கிருந்த ஊர்ச்செல்வாக்கில் அரைவாசியை இல்லாமல் செய்தவ னும் இவன்தான். தாயாரின் அரவணைப்பில் வளராதவன். தாயாரும் ஒரு ஆசிரியை என்பதனால் அவர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில் படிப்பித்து வந்தவர்.

இதன்காரணமாக பாடசாலை லீவுகாலங்களிலேதான் இவன் தாயாரைக்காண்பதுண்டு.

இவனது துடுக்குக்குணமும், அதனைக்கட்டுப்படுத்தமுடியாத தந்தையுமாக இவனது வாலிபப்பருவம் தொடங்கியபோதே, நாட்டில் இனப்பிரச்சனையும் தலைதூக்கவே இதனால் பயமுற்ற மகாலிங்கசிவத்தார் ராமை டென்மார்க்கிற்கு அனுப்பிவிட்டார்.

இவனது குடும்பத்தில் இவனே ஒரு பிள்ளையானதாலும் பெற்றோர் சுயமாக வாழக்கூடியவர்கள் என்பதனாலும் டென்மார்க் வாழ்க்கை தொடங்கியபோது அவனுக்கிருந்த அந்த ஒரேஒரு கவனிப்புமற்று சுதந்திரமானவன்தான் ராம்.

இவன் டென்மார்க்கிற்கு வரும்போது இடையே பலநாடுகளில் தங்கி வாழ்ந்து வந்ததனால் அவ்வவ்நாட்டு பழக்கவழக்கங்களும் அங்கு கிடைத்த நட்புகளும் அவனை சற்று மாறுபடுத்தியிருந்தன.

இந்த அனுபவப்பின்னணியில் அவனுக்குக்கிடைத்த அனுபவங்களில் பம்பாய் அனுபவங்களே அவனை அடியோடு மாற்றியமைத்தன எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இவனது பம்பாய் அனுபவங்கள் டென்மார்க் வாழ்க்கைக்கு அவனை சற்று தயார்நிலைப்படுத்தின எனலாம்.

******

பம்பாயில் ரயிலுக்குக்காத்திருப்போர் ரயிலில்வந்ததுதம் ரயிலில் ஏறத்தேவையில்லை பயணிகள் கூட்டத்தோடு கூட்டமாக நின்றுகொண்டால் சரி. சனக்கூட்டம் தானாகவே ரயிலுள் ஏற்றிவிடும். இந்த கூட்டத்தினுள் ராமும் அகப்பட்டு ரயிலில் பயணித்துக்கொண்டிருந்த போதுதான் அவன் நிர்மலைச் சந்தித்தான்.
இருவருமே ஈழத்தமிழர்கள் என்பதனை அடையாளம் கண்டுகொண்டு பம்பாய் மத்தியநிலையத்தில் இறங்கி அருகிலுள்ள தேநீர்ச் சாலை ஒன்றினுள் சிற்றுண்டி உண்டபோது இருவரும் உரையாடி நண்பர்களானாகள்.
இருவரும் ஒரே ஏஜென்சிக்காரனிடம் பணத்தைக்கட்டிவிட்டு அவனைது ஏமாற்று வித்தைக்குள் பம்பாய்க்குள் அலையும் ஈழத்தமி ழர்கள் என்ற ஒற்றுமையே அவர்களை நண்பர்களாக்கியதுபோலும்.
அப்போது ராம் ஒரு சாதாண ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தான்.
நிர்மல் தனக்குத்தெரிந்த ஒரு யாழ்ப்பாணத்தமிழ் குடும்பத்தோடு தங்கியிருந்தான். அந்த யாழ்ப்பாணத்தமிழ்குடும்பத்திற்கு பம்பாயில் பல வீடுகள் இருந்தன.
அங்கு பல தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்தனர்.
அங்குதான் நிர்மலும் தங்கியிருந்தான்.
தினமும் நிர்மலும் ராமும் ஏஜென்சிக்காரனை தேடும்வேட்டைக்காக சந்திப்பார்கள். இந்த கொஞ்சநாட்பழக்கத்திற்குள்ளேயே நிர்மடும் ராமும் நல்ல நண்பர்களாயினர்.
இதனால் ராம் தங்கியிருந்த ஹோட்டல் அறையை காலிசெய்துகொண்டு நிரந்தரமாக நிர்மலுடனேயே மற்ற இளைஞர்களுடன் தங்கிவந்தான்.
அங்குவாழ்ந்த இளைஞர்களுக்கு உதவிக்காக ஒரு மலையாளப்பெண் உதவிக்காக அமர்த்தப்பட்டிருந்தாள்.
அவளின் பெயர் மஞ்சு.
அங்கு வாழ்ந்த இளைஞர்கள் தின போதைவஸ்து பாவனையாளர்கள். அரைகுறைச்சாப்பாட்டோடு அவர்கள் போதைவஸ்திலேயே அடிமைப்பட்டிருந்தார்கள்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இந்த அடிமைகளுக்கு மஞ்சுவே பெரும் உதவியாக இருந்தாள்.
அவள் அழகானவள். பதினெட்டு வயதுக் கன்னி. திருமணமாகாதவள்.
ஆனால் அவள் நெற்றியில் எப்போதும் குங்குமத்திலகம் பளிச்சென்றிருக்கும்.
இதன் விபரங்கள் யாருக்கும் தெரியாது.
போதையில் வாழும் இந்த இளைஞர்களுக்கு அவளே எல்லாமாக இருந்தாள்.
அவர்களுக்கு உணவு தயாரித்தல், பரிமாறுதல், போதை கூடிவிடும் பட்சத்தில் அவர்களுக்கு முழுக்காட்டுதல், இரவானதும் அங்கு வாழும் இளைஞர்கள் யாரோ ஒருவனுடன் படுக்கைக்கு போதல்வேண்டும்.
இது அவளது கட்டாய வாழ்க்கை.
அவள் மறுப்புத்தெரிவிக்கமுடியாது. காரணம்......அவள் மாதாமாதம் பெறுகின்ற ஊதியத்தினுள் இக்கடமைகள் செய்யவுண்டுமென அவ்வீட்டுபொறுப்பாளர்களினால் வரையறுக்கப்பட்டிருந்தது.
ஆனால் அவள் எப்போதுமே கலகலப்பாக இருப்பாள்.
ஒருநாள் .......
அவள் தகப்பனார் அங்கு வந்திருந்தார்.மகளுக்கான ஊதியத்தைப்பெறும்பொருட்டு அவர் பம்பாய் வரும்போது அவளைப்பார்க வருவது வழக்கம்.
மஞ்சு அழுதுகொண்டிருந்தாள். தகப்பனாரின் முகத்தில் ஒன்றுமே இருக்கவில்லை. ஆனால் அவர் அவளைச் சமாதானப்படுத்துவதிலேயே அக்கறையாக இருந்தார்.
இந்த சம்பவத்தை ராம் கண்டபோதே அதிர்ந்துபோனான்.
அவர்கள் பேசிய மொழி அழகான மலையாளமொழியானாலும்.......
அவள் அழுதழுது தன்னை வீட்டுக்குக்கூடவே அழைத்துச்செல்லும்படியாக தகப்பனை மன்றாடியது ராமின் மனதை ஏதோசெய் தது.

தினமும் சந்தோசமாக தன்னைக்காட்டிக்கொள்ளும் மஞ்சுவா அழுகிறாள்....?
இப்போதுதான் ராம் என்ற இளைஞனுக்கு இந்த உலகத்தின் இன்னொரு பக்கம் வெளிச்சத்திற்கு வந்தது.
ராம் இந்த வீட்டுக்கு வந்து இரண்டு நாட்களே ஆகியிருந்ததால் மஞ்சுவைப்பற்றிய பல தகவல்ள் அவனுக்குத் கெரியாதிருந்தன.
இந்த இரண்டு நாட்களிலும் மஞ்சு ஒரு நடத்தைகெட்டவள் என்ற தகவல் மட்டுமே அவனுக்கு தெரிந்திருந்தது.
இப்படி ஒரு தந்தையா.....?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மகளை.....அதுவும்.......இப்படி கூலிக்காகவா......
ராமின் மனது அவளுக்காக இரங்கியது.
ஐந்து ஆண்டுகள் இவளின் வாழ்வு இப்படியேதானா.......?
இவளின் எதிர்காலம்.......?
ராமின் மனதில் கேள்விகள் எழுந்தன.
மஞ்சு கண்களைத்துடைத்துக்கொண்டு குசினிப்பக்கமாகப்போனாள்.
அவளின் தந்தை சேட்டுப்பொக்கற்றை தட்டிப்பார்த்துக்கொண்கு படிகளால் இறங்கிப்போனார்.
"டேய் நிர்மல் இதென்ன கொடுமையிடா......?" ராம் கேட்டான்.
"ராம் இது கொடுமையில்லையிடா .....இதுதான் வாழ்க்கை என்றான் நிர்மல்.

......

மஞ்சு படிகளில் இறங்கி புறப்பட்டாள்.
அவளின் சிவந்தமேனி காலைவெயிலில் பளிச்சிட்டது. இடையில் இருந்த தண்ணீர்க்குடம் அரைஅழுக்கோடு அவளின் வலது கைக்குள் அணைந்திருந்தது.
சிங்களப்பெண்களை நினைவுபடுத்தும் ஆடையுடுப்பு.
பெரியவட்டக்கழுத்துக்குள்ளால் எட்டிப்பார்க்கும் சிலுவைபோட்ட வெள்ளிச் சங்கிலி.
அவள் தண்ணீர் அள்ளிவரப்போகிறாள்.
படிக்கட்டுகளைக்கடந்து மாடிக்கட்டடங்களை விலக்கியபடி அந்தப்பொதுக்கிணற்றடியில் அவள்.
காலைநேரமாதலால் கிணற்றுப்புறச்சூழலில் யாருமே இல்லை.
அவளை யாரோ கட்டி அணைப்பதை உணர்ந்து அவள் நிமிர்ந்தாள்.
அது ராம்.
மஞ்சு சிரித்தாள்.
ராம் அதை எதிர்பாராதவன்போல் அதிசயித்து நின்றான்.
"நேற்றிரவு நீ என்னைப்பார்த்துத்திரிந்தவிதத்தில்....நான் புரிந்துகொண்டேன்" என்று செல்லத்தமிழில் சொன்னாள் மஞ்சு.
........ஆமாம்......என்பதுபோல் தலையாட்டிக்கொண்டே......தான் மஞ்சுவை விரும்புவதாக சொன்னான் ராம்.

................தொடரும்..........


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கற்பக வாசர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்,

தங்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.
உங்கள் ஆக்கங்களை 01.04.1995 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

இதழிற்கு கதை, சிறுகதை, கட்டுரை, கவிதை மற்றும் வேறு ஆக்கங்களை எழுதும் போது சதுரத்தாளில் எழுத வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். அதற்குப் பதிலாக வெள்ளைத்தாள் அல்லது ஒற்றைக் கோடு உள்ள தாளில் மிகவும் தெளிவாகவும், விளங்கக்கூடியதாகவும் எழுதும்படி மிகத்தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

&&&&&&&&&&&&&&&&&&&&&&&&

## நேரமாற்றம்

90 RADIO HERNING

## தமிழ் – டெனிஸ் ஒலிபரப்பு

FM STEREO 88,4 · 89,5 · 90,9 · 95,3
96,2 · 99,3 · 101,8 · 104,9 · 106,7 · 107,8 MHz

**ஒலிபரப்பானது ஒன்று விட்ட திங்கட்கிழமைகளில் மாலை 19.30 — 20.00 மணி வரை கேர்ணிங் வானொலி மூலம் ஒலிபரப்பாகும் என்பதனை அறியத்தருகிறோம்.**

| | | |
|---|---|---|
| 13.02.95 | 27.02.95 | 13.03.95 |
| 27.03.95 | 10.04.95 | 24.04.95 |
| 08.05.95 | 22.05.95 | 05.06.95 |

ஒலிபரப்பு அலை வரிசையை மேலே கவனிக்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







உ

கணபதி துணை

## அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம்
## டென்மார்க்.

# வருடாந்த அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

எங்கும் நிறைந்து அருள்சுரந்து தன்னை நாடிவரும் அடியார்கள் வினைதீர்த்து அஷ்டமாசித்திகளையும் நல்கும் அருள்மிகு சித்தி விநாயகப் பெருமானுக்கு நிகழும் தைத்திங்கள் 17ம் நாள் செவ்வாய்கிழமை (31.01.1995) முதலாக தைத்திங்கள் 26ம் நாள் வியாளக்கிழமை (08.02.1995) வரை தொடர்ந்து 9நாள் அலங்கார உற்சவமும், 09.02.1995 அன்று 10ம் நாள் 108 சங்காபிஷேகமும், 10.02.1995 அன்று 11ம் நாள் வயிரவர் பூ சையும் நடைபெற திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் அடியார்கள் யாவரும் வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளையும் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

## கிரியாகால விபரம்

"உற்சவங்கள் யாவும் தினசரி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்"

"சங்காபிஷேகம் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும்"

30.01.95(தை 16 திங்கள்) விநாயக வழிபாடு கணபதிஸோமம் வாஸ்து சாந்தி.

| | |
|---|---|
| 31.01.95(தை 17 செவ்வாய்) | 1ம் நாள் உபயம் திரு. பொன். தியாகராசா. Billund. |
| 01.02.95(தை 18 புதன்) | 2ம் நாள் உபயம் திரு. மா. தேவச்சந்திரன். Rødekro. |
| 02.02.95(தை 19 வியாழன்) | 3ம் நாள் உபயம் திரு. P. புஷ்பகுமார். Ikast. |
| 03.02.95(தை 20 வெள்ளி) | 4ம் நாள் உபயம் திரு. சி. ஶ்ரீதரன். Hammerum. |
| 04.02.95(தை 21 சனி) | 5ம் நாள் உபயம் பொது மக்கள். Nyborg. |
| 05.02.95(தை 22 ஞாயிறு) | 6ம் நாள் உபயம் திரு. தி. மாதவமேனன். Herning. |
| 06.02.95(தை 23 திங்கள்) | 7ம் நாள் உபயம் திரு. K. சிவரூபன். Viborg. |
| 07.02.95(தை 24 செவ்வாய்) | 8ம் நாள் உபயம் பொது மக்கள். Ringkøbing. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



08.02.95(தை 25 புதன்) 9ம் நாள் உபயம் ஸ்ரீ அம்பாள் அன் கோ. Fredericia.

09.02.95(தை 26 வியாழன்) 10ம் நாள் சங்காபிஷேகம் இந்து இளைஞர்கள். Danmark.

10.02.95(தை 27 வெள்ளி) 11ம் நாள் வயிரவர் பூ சை உபயம் த.பரராசசிங்கம், ந.பிரபாகரன். Hobro.

ஆலயபிரதமகுரு — த. சுப்பிரமணிய ஐயர். Herning.
உற்சவகுரு — சிவாச்சாரியரத்தினம் சிவஸ்ரீ சோ. ஸ்ரீதரக்குருக்கள்.
(Mulheim முத்துக்குமாரஸ்வாமி ஆலயபிரதமகுரு Germany)

உதவி குருமார் — ம. கணேசசர்மா. Billund.
இ. சுபாஸ்சந்திர ஐயர். Vejle.
செ. கிருஸ்ணமூர்த்தி ஐயர். Skjern.
பா. கனகசபாபதி ஐயர். பாலகேசசர்மா. Herning.

முக்கிய குறிப்பு — பூ , பால், பழம் முதலிய பூ சைத்திரவியங்களை அன்பளிப்பு செய்வோர் பூ சை ஆரம்பமாகும் நேரத்திற்கு முன்னர் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙகனம்.
இந்து கலாச்சார ஆராய்ச்சி தகவல் நிலையம்.
தபால் பெட்டி எண் — 317,
7400 சேர்ணிங். — டென்மார்க்.

*****************************************************

தைமாதம் தொடக்கம் ஆனிமாதம் வரையில் வரும் இந்துமத விஷேட தினங்கள்

| (ஆங்கிலம்) | (தமிழ்) | கிழமை | விஷேட தினங்கள் |
|---|---|---|---|
| **February** | | | |
| 03.02.1995 | 20 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 08.02.1995 | 25 | புதன் | கார்த்திகை விரதம் |
| | மாசிமாதம் | | |
| 13.02.1995 | 01 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 15.02.1995 | 03 | புதன் | பூ ரணை விரதம் |
| 16.02.1995 | 04 | வியாழன் | மாசிமகம் |
| 27.02.1995 | 15 | திங்கள் | பிரதோஷ விரதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
| **March** | | | |
| 01.03.1995 | 17 | புதன் | அமாவாசை விரதம் |
| 05.03.1995 | 21 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 14.03.1995 | 30 | செவ்வாய் | பிரதோஷ விரதம், |
| | பங்குனிமாதம் | | |
| 16.03.1995 | 02 | வியாழன் | பூ ரணை விரதம் |
| 17.03.1995 | 03 | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| 28.03.1995 | 14 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 30.03.1995 | 16 | வியாழன் | அமாவாசை விரதம் |
| April | | | |
| 03.04.1995 | 20 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 04.04.1995 | 21 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 09.041995 | 26 | ஞாயிறு | ஸ்ரீராம நவமி |
| 13.04.1995 | 30 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | சித்திரைமாதம் | | |
| 14.04.1995 | 01 | வெள்ளி | "யுவ" புதுவருடப் பிறப்பு |
| 15.04.1995 | 02 | சனி | சித்திரா பூ ரணை விரதம், சித்திரகுப்த விரதம் |
| 25.04.1995 | 12 | செவ்வாய் | திருநாவுக்கரசர் குருபூ சை |
| 27.04.1995 | 14 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 29.04.1995 | 16 | சனி | அமாவாசை விரதம் |
| **May** | | | |
| 01.05.1995 | 18 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 03.05.1995 | 20 | புதன் | சதுர்த்தி விரதம் |
| 12.05.1995 | 29 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 14.05.1995 | 31 | ஞாயிறு | பூ ரணை விரதம் |
| | வைகாசிமாதம் | | |
| 26.05.1995 | 12 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 28.05.1995 | 14 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| 29.05.1995 | 15 | திங்கள் | அமாவாசை |
| June | | | |
| 02.06.1995 | 19 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 10.06.1995 | 27 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| 11.06.1995 | 28 | ஞாயிறு | வைகாசி விசாகம் |
| 12.06.1995 | 29 | திங்கள் | பூ ரணை விரதம் |
| 13.06.1995 | 30 | செவ்வாய் | திருஞானசம்பந்தர் குருபூ சை |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | ஆனிமாதம் | | |
|---|---|---|---|
| 24.06.1995 | 10 | சனி | கார்த்திகை விரதம் |
| 25.06.1995 | 11 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 27.06.1995 | 13 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| **July** | | | |
| 01.07.1995 | 17 | சனி | சதுர்த்தி விரதம் |
| 02.07.1995 | 18 | ஞாயிறு | மாணிக்கவாசகர் குருபூ சை |
| 04.07.1995 | 20 | செவ்வாய் | ஆனி உத்தரம் |
| 10.07.1995 | 26 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 12.07.1995 | 28 | புதன் | பூ ரணை விரதம் |

இவ் விஷேட தினங்களுக்கான அட்டவணையை தயாரித்து உதவியவர்.

ம.கணேசசர்மா, Billund.

39 ம் பக்கத தொடர்ச்சி..

சிங்களர்தம் மூதாதை எனப் பேசப்படும் விஜயன் முதன்முதலாக வந்திறங்கிய துறை 'மாதித்த' என பௌத்த பாளி நூல்கள் தெரிவிக்கின்றன.

கி.பி. 2ம் நூற்றாண்டில் தொலமி வரைந்த உலகப் படத்தில் ஈழம் 'நாக தீபம்' எனவே குறிப்பிடப்பட்டது.

ஈழத்தின் நாகர்தம் வரலாறு, கி.மு. பல்லாயிரம் ஆண்டுகட்கு முற் பட்டதாகும். அது கடல் கோள் ஏற்பட்டு 'ஈழம் தீவு' நிலை எய்து முன் பரந்து கிடந்த நிலப் பரப்பில் தோன்றிய 'நாகர்' எனும் நாகரிகத் தமிழர்தம் பழங்கதை. பின்னாளில் திருவள்ளுவர் 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை' என்று குறள் வாயிலாக தோத்தரிப்பது, ஈழத் தமிழர்களின் மூத்த பழங்குடிகளான நாகரையே என்று கொள்ளல் தகும். இவர்களே அநாகரிக இயக்கரான சிங்களருக்குப் பௌத்த தருமத்தைப் போதித்திருக்க வேண்டும். ஈழத்து இஸ்லாமியர்தம் தாய்மொழி தமிழாக இருப்பதற்கும் இந் நாகர்களே காரணர்.


இந் நாகர்கள் கடல் கோளின் பின் தம்வணிக, கலாச்சார உறவுகளை தாய்த் தமிழகத்துடன் வகுத்து ஈழத்தை நாகரிகப் பாதைக்கு இட்டுச் சென்ற மூத்த குடிகள் என்பதற்குப் போதிய சான்றுகள் உள.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



www.tamilarangam.net

Postbesørget blad
7401 HRC 50147

**Tamilsk - Dansk Venskabsforening**

தமிழ் — டெனிஸ் தோழமை ஒன்றியம்

**Tamil - Danish Friendship Association**

Postboks 103, 7400 Herning, DK, Tel & fax 97 12 55 95, Giro no 695-0892

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்